# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 25 வெள்ளிக்கிழமை (09-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:103


## விபத்துச் சம்பவத்தை அடுத்து காலி நகரப் பகுதியில் மாணவர்கள் வன்முறை!

### நேற்றிரவு அங்கு ஊரடங்கு

கொழும்பு,மார்ச்9

காலி மத்திய கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் நேற்றுக்காலை பஸ் ஒன்றினால் மோதுண்டு காயமடைந்ததாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து காலி நகரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் வன்செயல்கள் வெடித்துள்ளன.

காலிப் பொலீஸ் நிலையம் மாணவர் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டது. மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 6 பஸ்களும், தனியார் ஒருவருக்குச் சொந்தமான 2 மினிபஸ்களும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டன.

மாணவனை மோதிவிட்டுச் சென்ற பஸ்ஸை வீதி ஒழுங்குக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் தடுத்து நிறுத்தாததை ஆட்சேபித்து காலிப் பொலீஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவரைக் கலைக்க பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததையடுத்தே

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆயுத தொழில்நுட்பத்தில் வட கொரியத் தொடர்பு உண்டா?

### பாதுகாப்புச் சஞ்சிகையில் தகவல்

கொழும்பு,மார்ச்9

ஸ்ரீலங்காப் படைகளுக்கு எதிரான தாக்குதலுக்கு கொரிய நாட்டுத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நவீன பீரங்கி பொருத்தப்பட்ட படகுகளை கடற்புலிகள் பயன்படுத்தியிருப்பது அறியவந்துள்ளதாக 'ஜேன்ஸ் இன்ரலிஜென்ஸ் ரிவியு' என்ற பாதுகாப்புச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி கடற்படையின் பயணக் கப்பல் ஒன்று விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.

அந்தத் தாக்குதல் தொடர்பாக வெளியிடப்பட்ட வீடியோப் படத்தில் கடற்புலிகளின் தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை நுட்பமாக ஆய்வுசெய்தபோதே மேற்படி தகவல் தெரியவந்திருப்பதாக அந்த இராணுவச் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

கடற்புலிகள் அந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்திய படகும், அதில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கியும் கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட ரகங்களை ஒத்தவையாக இருக்கின்றன.

அந்த வீடியோப் படத்தின்படி கடற்புலிகள் 107 மில்லிமீற்றர் 'கட்ஜூஷா'(KATYUSHA) ரக றொக்கெட்டுக்களைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் மீதான தடை பேச்சுக்கு குந்தகமாகக் கூடாது!

## பிரதமர் பாகிஸ்தான் செல்கிறார்

கொழும்பு,மார்ச்9

ஆப்கானிஸ்தானில் புராதன புத்தர் சிலைகளை அழிவிலிருந்து தடுக்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்காகப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நாளை சனிக்கிழமை பாகிஸ்தான் செல்லவுள்ளார்.

பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கும் நாடு. எனவே அந்த நாட்டின் மூலம் புராதன புத்தர் சிலைகளைப் பாதுகாக்கலாம் என்ற நம்பிக்கை எமக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## இரு தரப்பாரிடமும் பிரிட்டன் வற்புறுத்து

கொழும்பு,மார்ச்9

**பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்புத் தடைசெய்யப்பட்டிருப்பது எதிர்பாராத ஒரு விடயமாகும். அதைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளில் முறிவோ அன்றி முட்டுக்கட்டைகளோ ஏற்பட இரு தரப்பாரும் இடமளித்துவிடக் கூடாது.**

**இவ்வாறு ஸ்ரீலங்கா அரசிடமும், விடுதலைப் புலிகளிடமும் பிரிட்டிஷ் அரசு ஆணித்தரமாகக் கூறியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.**

உள்நாட்டு ஒழுக்கம், கட்டுப்பாட்டைக் கொண்டுவருவதற்காக பிரிட்டனில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் அமைப்பும் தடைசெய்யப்படுவது எதிர்பாராத ஒரு விடயமாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வரி மேலும் அதிகரிப்பு! அடுத்த ஜனவரிக்குள் சம்பள உயர்வு!!

### அரசின் பட்ஜெட் நேற்று சமர்ப்பிப்பு

கொழும்பு,மார்ச்9

அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் பொலீஸாருக்கும் முப்படையினருக்கும் அடுத்த ஜனவரி மாதத்துக்கு முன்னர் சம்பள உயர்வு வழங்கப்படும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வரவு - செலவுத்திட்டத்தை நேற்றுச் சமர்ப்பித்த பிரதி நிதி அமைச்சரும் அரசமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனை அறிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றம் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க தலைமையில் கூடியதும் பொ.ம.ஐ. முன்னணி அரசின் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து அமைச்சர் பீரிஸ் உரையாற்றினார்.

முற்பகல் 2.30இற்கு சபை கூடிய போதும் 15 நிமிடம் தாமதமாகவே அவரது உரை ஆரம்பமானது.

வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

- பாதுகாப்பு வரி 6.5 சதவீதத்தில் இருந்து 7.5 சதவீதமாக அதிகரிப்பு.
- வெளிநாட்டு பயணத்துக்கான விமான நிலையக் கட்டணம் 5 ஆயிரம் ரூபாவில் இருந்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பு (ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும்)
- கோர்பரேட் தொழில் நிறுவனங்களுக்கு கிடைக்கும் வருமானத்துக்கு விதிக்கப்படும் வரியில் 20 சதவீதம் 'சேர்ஜ் சார்ஜ்' விதிக்கப்படும்.
- பாதுகாப்புச் செலவீனம் 7,500 கோடி. அது மொத்த தேசிய வருமா

(14ஆம் பக்கம் பார்க்க)

### கண்டியிலும் கொழும்பிலும் நேற்றுப் பேரணி

கொழும்பு,மார்ச்9

ஆப்கானிஸ்தானில் உள்ள புராதன புத்தர் சிலைகள் அழிக்கப்படுவதற்கு எதிர்புத் தெரிவித்து 'சிஹல உறுமய'வின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பிலும் கண்டியிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பமான பேரணியில் பௌத்தபிக்குகள் மற்றும் பொதுமக்கள், கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பேரணியின் இறுதியில் பாகிஸ்தான் தூதரகத்தில் வைத்து அந்த நாட்டின் தூதரிடம் மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

கண்டி நகரத்தில் இடம்பெற்ற பேரணியிலும் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். (ஐ-7-9)

## கனடாவில் ஈழத் தமிழ் இளைஞர் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயம்!

ரொறன்ரோ,மார்ச்9

கனடாவில் ஈழத் தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த ஞாயிறன்று இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

குற்றச் செயலில் ஈடுப்பட்டதற்காகக் கனடாவின் பிமிகோ நகர சீர்திருத்த நிலையத்தில் தடுத்துவைக்கபட்டு விடுதலையான பஞ்சலிங்கம் நாகலிங்கம் (வயது 28) என்ற இளைஞரே சுட்டுக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் மீது இனந்தெரியாதோர் சரமாரியாகச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

மார்பிலும், கையிலும் படுகாயங்களுக்கு இலக்கான இந்த இளைஞர் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## வவுனியா நலன்புரி முகாமில் இளைஞர், யுவதிகள் இரவில் அழைக்கப்பட்டு விசாரணை!

வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி முகாமில் தங்கியிருக்கும் இளைஞர், யுவதிகள் இரவு வேளைகளில் விசாரணைகளுக்கென அழைத்துச்செல்லப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் 10 பேரும் நேற்று 3 பேரும் இவ்வாறு விசாரணைகளுக்கென அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## போரை நிறுத்தும் அவசியத்தை அரசின் பட்ஜெட் உணர்த்துகிறது

### ஜோசப் பரராஜசிங்கம் கருத்து

கொழும்பு,மார்ச்9

தொடரும் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேசி தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது என்பதை வரவு - செலவுத்திட்டம் எடுத்துக்காட்டுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசு சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டம் சாதாரண மக்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரணிப் பகுதி இளைஞர்கள் மூவர் ஒரே நாளில் காணாமற் போயினர்

வடமராட்சி,மார்ச்9

வரணி இயற்றாலையைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் கடந்த 6 ஆம் திகதி முதல் காணாமற்போய்விட்டதாக உறவினர்கள் பருத்தித்துறையில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறையிட்டிருக்கின்றனர்.

தங்கராசா மகேஸ்வரன் (வயது 21), நவரத்தினராசா ஜெயராசா (வயது 24), கந்தசாமி ஸ்ரீகாந்தன் (வயது 24) ஆகிய மூவருமே காணாமற் போயுள்ளனர். இவர்களில் தங்கராசா மகேஸ்வரன் என்பவர் அன்றைய தினம் வீதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டதாகவும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தேவா பொன் விழாச்சபை

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர்

**உயர்திரு.க.தேவராஜா அவர்களின்**

## பொன் விழா



இடம் : இனுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில், கந்தையா அரங்கு, இனுவில்

காலம் : நாளை (10.03.2001) சனிக்கிழமை பி.ப. 2.30மணி

தலைவர் : திரு.அ.பஞ்சலிங்கம்
*தேவா பொன்விழாச் சபை*

### நிகழ்ச்சிகள்

2.30 மங்கள விளக்கேற்றல்
2.35 தேவாரம்
2.40 வரவேற்புரை - திரு.இரா.அருட்செல்வம்
*(அமைப்பாளர், தேவா பொன்விழாச் சபை)*
2.45 ஆசியுரை ✶ பிரம்மஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள்
2.50 ✶ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
2.55 ✶ சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
3.00 வாழ்த்துப்பா
✶ மகா வித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்
3.10 வாழ்த்துரைகள்
✶ பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை
*(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.)*
✶ திரு.து.வைத்திலிங்கம்
*(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.)*
✶ பேராசிரியர் அ.சண்முகதாஸ்
*(உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்.)*
✶ பேராசிரியர் செ.பாலச்சந்திரன்
*(கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்.)*
✶ திரு.பா.நடராஜசுந்தரம்
*(பீடாதிபதி, முகாமைத்துவ வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.)*
✶ கலாநிதி சபா.ஜெயராஜா
*(தலைவர், நுண்கலைப்பீடம்.)*
✶ திரு.ஆறு.திருமுருகன் *(ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.)*
✶ க.கனகராசா
*(அதிபர், இனுவில் இந்துக்கல்லூரி)*
4.20 மலர் வெளியீடு - திரு.அ.பஞ்சலிங்கம்
*(தலைவர், தேவா பொன்விழாச் சபை)*
4.25 மலர் பெறுதல் - விழா நாயகர்
4.40 மலர் வெளியீட்டுரை
- கலாநிதி க.குணராசா
*(முன்னாள் பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்*
4.50 மலர் ஆசிரியர் உரை
- திரு.ஞானதிருக்கேதீஸ்வரன்
*(அமைப்பாளர், தேவா பொன்விழாச் சபை)*
5.50 விழா நாயகரைக் கௌரவித்தல்
6.05 ஏற்புரை - விழாநாயகர்
6.15 நன்றியுரை - திரு.வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன்
*(செயலாளர், பொன்விழாச் சபை.)*

குறிப்பு: விழா நாயகர் இனுவில் கந்தசுவாமி கோயில் நுழைவாயிலில் இருந்து விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

"தேவா பொன் விழாக்காண வாரீர்" என
*உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(84916) *- தேவா பொன்விழாச் சபை.*

---

# நாகம்ஸ்
சுன்னாகம்

அறிஞர்
ஐயன்னா நூல் நிலைய
வளர்ச்சி
நிதி உதவிக் காட்சி

07.02.2001 காண்பிக்கப்பட இருந்த காட்சிகள் இன்று 09.03.2001 காண்பிக்கப்படும்

*10.30 அஜித் நடித்த*
**'தீனா'**
*2.30 பிரசாந்த் - சாலினி*
**'பிரியாத வரம் வேண்டும்'**
*(ரீல்ஸ் அல்ல)*

(C/15621)

---

# அறிவித்தல்

சுன்னாகம் மேற்கு அறிஞர் ஐயன்னா நூல் நிலைய வளர்ச்சி நிதிக்கு ஒத்துழைப்பு வழங்கிய எல்லா நண்பர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். சுன்னாகம் வர்த்தகப் பெருமக்களுக்கும் நாகம்ஸ் சினிமா ஸ்தாபனத்தாருக்கும் நன்றி கூற நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

G.C.E. சாதாரண, உயர்தர கடந்த ஆண்டுகளுக்கான (2000 வரை) வினா விடைகள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் தேவையான மாணவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி இலவசமாக ஒரு வாரம் வீட்டுக்கு எடுத்துச் சென்று படிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்,
அ.ஐயன்னா சனசமூக நிலையம்.

(C/15618)

---

தரம்10.11 (O/L) மாணவர்களே!
இன்று 9 மணிக்கு (பு.நே.)

**விஞ்ஞானக் கருத்தரங்கு**

வரைவுகள் பற்றி தெளிவாக விளக்க வருகிறார்
யாழ்.கொழும்பு பிரபல முன்னணி ஆசிரியர்

விஞ்ஞானம்
GRAPHS குமரன்

அனைத்து யாழ்.மாணவர்களும் பங்குபற்றி பயன் பெறுக!

☞ சைன் உடுவில்

(85068)

---

# மரண அறிவித்தல்

**செல்வன்**
**ஜோன்சன் ஜெலான்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் ஜோன்சன ஜெலான் கடந்த 07.03.2001 புதன் கிழமை பிரான்ஸில் அகாலமரணமானார்.

இவர் ஜோன்சன் - திருமதி புளோரா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் லக்சனின் அன்புத் தமையனும் திருமதி ஞா.கிளாரம்மாவின் அன்புப் பேரனும் திரு. திருமதி ஜோசப்பின் அருமைப் பேரனும் மற்றில்டா, பொபி (யாழ்ப்பாணம்), கில்டா (கனடா) ஆகியோரின் பெறாமகனும் அல்பிரட், கொன்சிரினா அவர்களின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:-
திருமதி ஞா.கிளாரம்மா
(அம்மம்மா)

*இல.195.'A' கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* (85155)

---

# ஸ்ரீ வல்லிபுர மோட்டோ

SVP

எதிர்வரும் 12.03.2001 படச்சுருள்களும், வீடியோ கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

**குறிப்பு**

வீடியோ கசற்றுகளில் உடைந்த கட்டடங்கள், இராணுவக் காவலரண்கள் வீடியோ பிடிக்கப்பட்டிருந்தால் அவற்றைக் கொழும்புக்கு அனுப்பிவைக்கமுடியாது.

*நல்லூர்* ☏ 021-2604 (85116) *புலோலி* ☏ 070 212720

---

# பொன்விழா வாழ்த்துக்கள்



**யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர்**
**உயர்திரு.க.தேவராஜா**
**அவர்களின்**

பொன்விழாவை முன்னிட்டு எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

(85164)

---

# மூன்றாம் ஆண்டு நினைவு தினம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1924 - 09 - 10 | 1998 - 03 - 12 |

**அமரர்**
**அப்பாப்பிள்ளை சிதம்பரநாதன்**

ஆண்டுகளோ மூன்று சென்றதப்பா!
ஆறிடுமோ எம்துயர் ஆறாது ஆறாது
அன்புச் சுவையூட்டி பாசமுடன் வளர்த்தீரே!
ஆண்டுகள் சென்றாலும் ஆறுதல் இல்லையப்பா!
நித்தமும் நிந்நினைவு மறக்க முடியவில்லையப்பா!
இன்பமாய் வாழவைத்து இறைபதம் எய்தினீரே!
இறைவனை இறைஞ்சி உன்பதம் தாழ்பணிவோம்.

*மஞ்சத்தடி முருகன் கோயிலடி, இணுவில்.*

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(85110)

---

# மரண அறிவித்தல்

**சற்குணன் சாரா ஜெயதேவி**

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணன் சாரா ஜெயதேவி (04.03.2001) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் சற்குணனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற தவானந்தகுமரன், சரஸ்வதியின்(மணி) அன்பு மகளும், ஜெயந்தினி, ரூபன், ஜுட், ஸ்வீட்டி, பியூட்டி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திராவின் அன்புச் சகோதரியும் சுதனின் அன்பு மாமியாரும், கிருபா, மகாதேவன், நகுலா, துரை, யோகம், சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், ஜெபநிதி, ஜோயல், ஜெபதர்சினி, ஜெபாலினி ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், அன்ரூவின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (10.03.2001) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். அதேதினம் மு.ப. 10 மணிக்கு சங்குவேலியிலுள்ள அவரது இல்லத்தில் ஜெப ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: -
இந்திரா கிருபாமூர்த்தி
(சகோதரி)

*சங்குவேலி, மானிப்பாய்.*

(85132)

# உதயன்

## விசனம் தரும் கருத்து!

ஈழத் தமிழர்கள் தம்மைத் தாமே ஆண்ட சரித்திரம் உடையவர்கள். அந்நியர்ஆட்சி இங்கு வருவதற்கு முன்னர் சிங்கள அரசுகளைப் போலத் தமிழ் அரசுகளும் இந்நாட்டில் இருந்தன.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களாக இருந்தன (அதற்கான தொல்லியல் சான்றாதாரங்களும் கணிசமாக உண்டு.) அதனால் அவர்கள் அந்தப் பிரதேசங்களைத் தமது தாயகம் என்று சொல்லும் உரிமையுடையவர்கள்.

ஆனால், யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ், வடக்கு—கிழக்கைத் தமிழர்கள் தமது தனித்துவமான பூமி என்று கூறுவது — உரிமை கொண்டாடுவது — தீவிரவாதமான கருத்து என்று வர்ணித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் தமது யாழ்ப்பாண உரையில் கூறிய பல கருத்துக்களை இப்பகுதி மக்கள்சிரணிக்கவில்லை; பெரும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

அதுவும் சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சிகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் பேற்படி கருத்தைத் தெரிவித்திருப்பது—

ஆகக் குறைந்தது தமிழர் தாயகத்தில் சுயாட்சி உரிமையையாவது வழங்கும் விதத்திலேயே இனப்பிரச்சினைத் தீர்வு அமைய வேண்டும் என்று ஏங்கும் — எதிர்பார்க்கும் — யாழ்ப்பாண மக்களுக்கு — தமிழ் மக்களுக்கு — பெரும் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் தந்துள்ளது.

இலங்கை தனிச் சிங்கள நாடு என்று தெற்குத் தீவிரவாதிகள் உரிமை கொண்டாடுவதோடு, தமிழர்கள் வடக்கு — கிழக்கைத் தமது பிரதேசம் என்று உரிமை கொண்டாடுவதை ஒரே மட்டத்தில் வைத்து ஒப்பிடுவது பொருத்தமானதல்ல.

1958, 1977, 1983 ஆகிய வருடங்களில் தென்னிலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட போது, அவ்வேளைகளில் பதவியில் இருந்த கொழும்பு அரசாங்கங்கள் தமிழ் மக்களின் பாதுகாப்புக் கருதி அவர்களை எங்கே அனுப்பின? வடக்கு— கிழக்குப் பிரதேசத்துக்குத் தான்; அவையே தமிழர்களின் பூர்விக வழி வாழ்விடங்கள் எனக் கருதியதால்!

ஓர் இனத்துக்கெனச் சொந்த வாழ்விடம், தனியான மொழி, தனித்துவமான கலாசாரம் என்பன இருந்தால் அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்பது சர்வதேசப் பிரகடனம்.

தமிழர்கள் தாயகத்துக்கு உரிமை கொண்டாடுவதனைத் தீவிரவாதமாக்கிவிட்டால், சுயநிர்ணய உரிமைக்குத் தகுதியற்றவர்கள் ஆக்கிவிடலாம் என்ற உள்நோக்கத்துடன், தூண்டுதலுடன் இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது எனலாம்.

அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் பல முரண்பட்ட கருத்துக்களை முன்வைத்துச் சென்றபோதிலும் —

தமிழர் தாயகம் குறித்த அவரது கருத்து, ஈழத்தமிழர்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளின் உயிர் நாடியையும் சுதந்திர வாழ்வுக்கான— கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்வுக்கான— இதயத்தையும் இறுக்கிப் பிழிந்துவிட்டது.

இது, இனி நிகழவிருப்பனவற்றின் முன்னோட்டமா என்றும் விசனமுறுகிறார்கள் தமிழர்கள்.

---

### அமெரிக்கத் தூதுவரிடம் யாழ். பல்கலைக்கழக மாணவர் மகஜர்

# தம் தலைவிதியைதாமே தீர்மானிக்கும் தீர்வையே முழுத் தமிழ்பேசும் மக்களும் வேண்டிநிற்கின்றனர்

## புலிகளுடன் பேச்சை ஆரம்பிகக அரசுக்கு அழுத்தம் தரவேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

எமது தலைவிதியை நாமே தனித்துத் தீர்மானிக்கின்ற அரசியல் தீர்வையே எமது முழுத் தமிழ் பேசும் மக்களும் வேண்டி நிற்கின்றனர்; அதற்கான அரசியல் தீர்வை எட்ட உடனடியாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு தகுந்த வகையில் அமெரிக்க அரசாங்கம் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத்தூதர் அஸ்லி வில்ஸிடம் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அமெரிக்கத்தூதரிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா அரசானது 1983ஆம் ஆண்டுகாலப்பகுதியிலிருந்து தமிழ்பேசும் மக்களின் மீதான இன அடக்குமுறைக் கொடுமைகளைப் பல்வேறு வடிவங்களிலும் மிகவும் பாரிய அளவில் கட்டவிழ்த்து வருகின்றது. அகிம்சை வழியில் தமது அரசியல் உரிமைகளான தனித் தேசிய இன அங்கீகாரம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை பெறுவதற்காகப் போராடிய சந்தர்பங்களில் எல்லாம் சிறிலங்காவின் சிங்களப் பேரினவாத அரசியல் தலைமைகளினால் அகிம்சை வழிப்போராடங்கள் நசுக்கப்பட்டன.

இலங்கை ஒரு பௌத்த நாடு. அது சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது என்ற பேரினவாதச் சித்தாந்தத்தினை தனது அரசியல் சித்தாந்தமாக வரித்துக்கொண்டு தொடர்ந்து ஆட்சி பீடமேறி வரும் சிங்களத் தலைமைகள் தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளான தனித் தேசிய இனம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பனவற்றை அங்கீகரிக்க மறுத்து வருகின்றன. தங்களின் அபிலாசைகளை தமிழ் பேசும் மக்கள் வெளிப்படுத்தாது இருப்பதற்காக தனது இராணுவ இயந்திரத்தின் மூலம் பாரிய இன அழிவையும், பாரிய இன அடக்குமுறைக் கொடுமைகளையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளன. தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைமைகளுடன் காலத்துக்குக் காலம் செய்யப்பட்ட அரசியல் உடன்படிக்கைகள் சிங்களத்தலைமைகளினால் கிழிக்கப்பட்டன என்பது வரலாற்று உண்மை.

தமிழ் பேசும் மக்கள் சிங்கள இராணுவத்தினால் சட்டத்திற்குப் புறம்பான முறையில் கொலை செய்யப்படுவதற்கும், விசாரணை இன்றி காலவரையறையின்றி சிறை வைக்கப்படுவதற்கும், காணாமல் போவதற்கும் வழிவகுக்கும் சட்டங்களை அமுல்படுத்தி மாதந்தோறும் இடம்பெறும் நாடாளுமன்றக் கூட்டத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பின் மூலம் தமிழின அழிப்பை இலங்கை அரசு திட்டமிட்ட ரீதியில் நடத்தி வருகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற சட்டங்களை தொடர்ந்து அமுல்படுத்தி வரும் ஸ்ரீலங்கா அரசு, ஜனநாயகம் என்ற போர்வையில் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக பாரிய மனித உரிமை மீறல்களைச் செய்து வருகின்றது.

### ஆயுதப் போராட்டம் வரலாற்றின் நிர்ப்பந்தமே

இந்தப் பின்னணியில் தமிழ் பேசும் மக்கள் தமது சுய இருப்பையும், சுய சௌரவத்தையும் உறுதிப்படுத்துவதற்காக ஆயுதமேந்திப் போராடுவது வரலாற்றின் நிர்ப்பந்தமே. தமிழ்பேசும் மக்களின் சிங்கள அடக்குமுறைக் கொடுமைகளுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தின் பரிமாணமே தமிழீழ விடுதலைப் புலிகள் என்பது யாவரும் அறிந்த உண்மை.

தமிழ் பேசும்மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக போராடி வரும் தமிழ் மக்களின் போராடும் வலுவே தமிழீழ விடுதலைப்புலிகள். சுருக்கமாகக் கூறின் அடக்குமுறைக் கொடுமைகளை சந்தித்து வரும் தமிழ்பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான அரசியல் இராணுவப் பரிமாணமே தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை மறுத்து அவர்களின் தனித் தேசிய இனம், மரபு வழித் தாயகம் போன்ற அரசியல் அபிலாசைகளைச் சிதைக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்கள மொழி அமுலாக்கல் சட்டம், திட்டமிட்ட குடியேற்றம் என்பன மூலம் தமிழ் இனத்தை படிப்படியாக திட்டமிட்ட ரீதியில் அழித்தொழிக்கும் நீண்டகாலத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதிலே தற்போதைய அரசும் சரி, அதற்கு முந்திய சிங்கள அரசியல் தலைமைகளும் ஈடுபட்டு வருகின்றமையும் யாவரும் அறிந்ததே.

ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வரும் பாரிய பொருளாதாரத்தடை, கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சு, பல்குழல் எறிகணை வீச்சு, அடிக்கடி நிகழும் இராணுவ நடவடிக்கைகள் என்பன பல்லாயிரக்கணக்கான தமிழ்பேசும் மக்களை கொன்றொழித்துள்ளது. தொடர்ந்தும் கொன்றொழித்து வருகின்றது. சமாதானத்திற்கான யுத்தம் எனக்கூறி மிகவும் நவீனரக ஆயுதங்களின் உதவியுடன் பாரிய தமிழின அழிப்பில் தற்போதைய அரசு ஈடுபட்டு நிற்கின்றது. என்றுமில்லாதவாறு பாரிய தமிழின அழிப்பை தற்போதைய அரசு மேற்கொண்டிருக்கின்றது.

### மரணபயம் காரணமாக மக்கள் மௌனம்

யாழ். குடாநாடு இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான பின்னர் தமிழ் பேசும் மக்கள் மிகவும் பாரிய மனித உரிமை மீறல்களைச் சந்தித்து வருகின்றனர். மக்கள் தமக்கு இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களை வெளியே தெரியப்படுத்துவதற்கு மரணபயம் காரணமாக மௌனமாக இருக்கின்றனர்.

ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர். இவர்கள் அனைவருமே சட்டத்திற்குப் புறம்பான ரீதியில் கொலை செய்யப்பட்டு செம்மணி போன்ற இன்னும் அடையாளம் காணாப் படாத பாரிய மனிதப் புதைகுழிகளில் புதைக்கப்பட்டுவிட்டனர்.

இளைஞர்களும், யுவதிகளும் காணாமல் போதலும், சித்திரவதைக்குள்ளாதலும், விசாரணையின்றி காலவரையறையின்றி தடுத்து வைக்கப்படுதலும் இன்றும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

யாழ் குடாநாட்டில் நடைமுறையில் இருக்கும் இராணுவமயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தினால் தமிழ்பேசும் மக்களின் பேச்சுச் சுதந்திரம், சுயமாக கருத்து வெளியிடும் சுதந்திரம், சுயமாக ஒன்று கூடும் உரிமை முற்றாக மறுக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் நிகழும் மனித உரிமை மீறல்களை வெளிப்படையாக எவராவது தெரியப்படுத்த முனையும் சந்தர்ப்பத்தில் அவர் 'புலி' முத்திரைக் குத்தப்பட்டு அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்படுகின்றார்.

### நடைப் பிணங்களாக குடாநாட்டு மக்கள்

ஒட்டுமொத்தத்தில் யாழ் குடாநாட்டு மக்கள் மரணபயத்தில் உறைந்து போய் தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்த முடியாத நடைப் பிணங்களாகவே உள்ளனர்.

யாழ். குடாநாட்டில் வாழும் எந்தவொரு தமிழ் பேசும் மகனும் ஏதாவது ஒரு விதத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பாதிக்கப்பட்டவராக அல்லது பாதிக்கப்பட்டுக்கொண்டிருப்பவராகவே உள்ளார். ஒவ்வொரு குடும்பத்திலும் பெரும்பாலும் ஒருவர் அல்லது இருவர் அல்லது பலர் காணாமல் போயும், சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டும், விசாரணையின்றி கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்தும் வைக்கப்பட்டுள்ளனர்

தமிழ்ப் பெண்கள் பலர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர், இன்றும் யாழ். குடாநாட்டில் பாலியல் வல்லுறவுகள் இடம்பெற்று வருகின்றன. கொலைப்பயமுறுத்தல், கற்பு தொடர்பான எமது சமூக இறுக்கம் என்பன இவ்வாறான பாலியல் வல்லுறவுக்கு உள்ளான பெண்கள் தாமாக முன்வந்து தமக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களை வெளிக்கொணரத் தடையாக உள்ளது. இவ்வாறான இராணுவ அடக்குமுறைக் கொடுமைகளினால் யாழ். குடாநாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் பாரிய உளவியல் பிரச்சினைகளான மன அழுத்தம், போரியல், மனவடு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் வெடித்த போரினால் தென்மராட்சிப் பகுதியில் சுமார் 150,000 மக்கள் அகதிகளாகி முற்றாகச் சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்க்கப்பட்டு அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். பல சிறுவர்கள்பாரிய போசணைக் குறைபாட்டினால் பீடிக்கப்பட்டுள்ளனர். அகதி வாழ்க்கை, தொழில் இழப்பு, உயிர் இழப்பு, உடைமை இழப்பு என்பன பல மக்களை உளவியல் நோயாளிகளாக மாற்றியுள்ளது.

இந்தக் கொடிய யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளான தனித் தேசிய இனம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை அங்கீகரித்து நீதியான, நியாயமான அரசியல் உரிமைகளைப் பெற்று எந்த விதமான இனப்பாகுபாடும் இன்றி எமது தலைவிதியை நாமே தனித்துத் தீர்மானிக்கின்ற அரசியல் தீர்வையே எமது முழுத் தமிழ் பேசும் மக்களும் வேண்டி நிற்கின்றனர்.

இவ்வாறான ஓர் அரசியல் தீர்வை பெறுவதற்காக உன்னதமான தியாகங்களைப் புரிந்து போராடிவரும் தமிழ்

(10ஆம் பக்கம் பார்க்க)

---

## நாளை

மாசி 26

சனிக்கிழமை

திதி: பிரதமை முன் இரவு 9.40 வரை.

நட்சத்திரம்: உத்தரம் பின் இரவு 12-31 வரை.

திருவள்ளுவர் குருபூசை நாள்

சுபநேரம்: 3.24 — 4.54

ராகுகாலம்: 9.24—10.54

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

## உதயவாக்கு

காலத்தின் மதிப்புத் தெரிந்த மனிதனுக்கு வாழ்வின் மதிப்புத் தெரியும்.

---

# ஆலயத்தில் மாங்கல்யம் மாற்றிக் கட்டப்படவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 9

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற திருமண வைபவம் எதிலும் மணமகள் எவரது கழுத்திலும் இன்னொருவருக்கு உரிய மாங்கல்யம்- தாலிக்கொடி- தவறுதலாகக் கட்டப்பட்டதில்லை.

செல்வச்சந்நிதி ஆலயத்தைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய ஆ. சிவசண்முகஐயர் அவர்கள் இவ்வாறு அறியத் தந்துள்ளார்.

''திருமணத்தில் தாலிக்கொடி மாறிய சுவாரஸ்ய சம்பவம்'' என்ற தலைப்பில் 16-02-2001 ஆம் திகதிய உதயன் 8 ஆம் பக்கத்தில் வெளியான செய்திக்கே அவர் இவ்வாறு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஐந்துக்கு மேற்பட்ட திருமணங்கள் 12-02-2001 ஆம் திகதி திங்கட்கிழமையே நடைபெற்றன (செவ்வாய்க்கிழமை அல்ல) அன்று நானே பூசைகளைச் செய்தேன். செய்தியில் குறிப்பிட்டது போன்று தாலிக்கொடி மாற்றிக் கட்டிய நிகழ்வு எதுவும் அன்று நடைபெறவில்லை. உண்மைக்குப் புறம்பான செய்தி வெளியிட்டுள்ளீர்கள்— என்று ஆ. சிவசண்முகஐயர் அவர்கள் மேலும் தெரிவிக்கிறார்.

தவறான செய்திக்கு வருந்துகிறோம். சரித்திரச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி ஆலயத்துக்கோ அல்லது ஆலய நிர்வாகத்தினருக்கோ களங்கம் உண்டாக்கும் நோக்குடன் மேற்படி செய்தி வெளியிடப்படவில்லை என்பதனை அறியத்தருகிறோம்.

-ஆசிரியர்

## வடமராட்சி லயன்ஸ் கழகம்

LIONS CLUB OF VADAMARADCHI

எமது கழகத்தால் 04-03-2001 (ஞாயிற்றுக் கிழமை) நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் கீழ்க்குறிப்பிடப் படும் இலக்கங்கள் அதிர்ஷ்டங்களுக்குரியனவாகும்.

1 ஆம் பரிசு—0450 - தங்கச்சங்கிலி

2 ஆம் பரிசு—0480 - வானொலிப்பெட்டி (2 இன் 1)

3 ஆம் பரிசு—1810 - பெற்றோல்மக்ஸ்

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 1) 1603 | 6) 1122 |
| 2) 1033 | 7) 1002 |
| 3) 2051 | 8) 1742 |
| 4) 2082 | 9) 2787 |
| 5) 1066 | 10) 2101 |

அதிர்ஷ்டசாலிகள் தமது பரிசில்களை 17-03-2001 சனிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் மகாநாட்டு மண்டபத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ந. சோமசுந்தரம்
தலைவர்

மு. தர்மலிங்கம்
செயலாளர்

(85107)

---

யா / சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
மானிப்பாய்

## புதிய விஞ்ஞான ஆய்வுகூட கட்டட திறப்பு விழாவும், வருடாந்த பரிசளிப்பு விழாவும் 1999/2000

இடம்: வித்தியாலய பிரதான மண்டபம்

காலம்: இன்று [09-03-2001] வெள்ளிக்கிழமை மு. ப. 10 மணி

தலைவர்: திரு. செ. குபேரநாதன் (அதிபர்)

பிரதம விருந்தினர்: திரு. வி. இராசையா
(கல்விப்பணிப்பாளர் வலிகாமம் வலயக் கல்வித் திணைக்களம், மருதனார்மடம்)

சிறப்பு விருந்தினர்: திரு. க. தனபாலசிங்கம்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டம்)

கௌரவ விருந்தினர்: திரு. V. A. ஜோன்சன்
(தலைவர், வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்)

திரு. அ. சிவதாசன்
(பாடசாலை ஸ்தாபகரின் பேரன், யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

வாழ்த்துவோர்:
எங்கள் வித்தியாலயம் கல்விவளர்ச்சியில் மேன்மேலும் மேம்பாடடைய வாழ்த்துகின்றோம்.

பாடசாலை நிறுவுநர் குடும்பத்தினர்.

(85136)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளராகிய
உயர்திரு. க. சுந்தரேசன்
அவர்களின் அன்பு மாமனார்

### கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு, ஆறாத்துயரில் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல கேந்திர குழு உறுப்பினர்கள்,
கமநல கேந்திர நிலைய உத்தியோகத்தர்கள்.

விவசாய சம்மேளனங்கள்,
உரும்பிராய்.

(85090)

---

## கட்டடப் புனரமைப்புக்கு ரூ. 40 ஆயிரம் உதவி

யாழ்ப்பாணம், மார்ச் 9

இளவாலை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத் திருத்த வேலைகளுக்காக வடக்கு — கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் 40 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் சேதமடைந்துள்ள மேற்படி கட்டடத்தைப் புனரமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி பற்றாக்குறையாக இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-9-ரி)

## வீடியோப் படம்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் சீன திரைப்படக் கூட்டுத்தாபனம் தயாரித்த பல திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்ட இரு திரைபடங்கள் அடுத்தடுத்து காண்பிக்கப்படவுள்ளன.

அவற்றுள் முதலாவதாக ஷங்யிமோ (Zhangyimou) இயக்கிய றெய்ஸ்தரெட்லெண்டர்ன் (Raise the Recitantern) எனும் திரைபடம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு புலியயற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப் படும். (ம)

## செயலமர்வுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 இல் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் வர்த்தக பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தரம் 7 இல் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோருக்கான சேவைக்காலச் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

வர்த்தக பாடச் செயலமர்வில் காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலர்களும் கருத்துரை வழங்கவுள்ளதால் அனைத்து வர்த்தக பாட ஆசிரியர்களையும் பங்கு பற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் நடனம், மனைப்பொருளியல் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலச் செயலமர்வுகள் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

நடன பாட செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், மனைப் பொருளியல் பாட செயலமர்வு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் இடம்பெறும். (ம-117)

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 4 வகுப்புகளில் கற்பிக்கும் ஆரம்பக்கல்வி பாட ஆசிரியர்களுக்கும், தரம் 7 வகுப்புகளில் கற்பிக்கும் தமிழ்ப்பாட ஆசிரியர்களுக்குமான சேவைக்கால செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (ம-117)

BRIGHTMAN
கல்வி நிலையம்
(நீராவியடிப் பிள்ளையார் கோவில் முன்பாக)
பிறவுண் வீதி, யாழ்நகர்
A/L 2002 LO[illegible]
குறியீட்டு
அளவையியல்
By:- ரகுமார் (B.A)
ஆரம்பம்;- 10 - 03 - 2001
SAT - 3-00 P. M.
(தனி ஒரு பாட அனுமதி வழங்கப்படும்)
[85133]

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர் திரு. சி. நாகையா

யா/ ஆனைக்கோட்டை அமிதக பாடசாலை அதிபர் அவர்கள் தரம் II க்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை ஆசிரியர்கள்.

(85147)

---

## தவறிவிட்டன

சரசாலை வடக்கைச் சேர்ந்த
வேலுப்பிள்ளை யோகேஸ்வரன்

என்பவரது அடையாள அட்டைகள் (612181012 V) சாரதிய லைசென்ஸ் உட்பட ஆவணங்கள் நெல்லியடிக்கும் வல்லைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி பஸ் நிலையம், கலியுகன் ஸ்ரோர்ஸில் அல்லது செல்லமுத்துரஸ் புடைவையகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (85746)

---

## டி. ஏ. எம். பட்டதாரிகள் வைத்திய சங்கம்
### யாழ்ப்பாணம்

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 2001 - 01 - 21 அன்று யாழ் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சங்க நிர்வாக இயக்குநர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| தலைவர் | - Dr S பரமசிவம்பிள்ளை J.P. |
| உபதலைவர் | - Dr. S. ஸ்ரீஜீபகன் |
| செயலாளர் | - Dr. S. T. சிங்க அரியரட்ணம் |
| உபசெயலாளர் | - Dr K. நவரத்தினம் |
| பொருளாளர் | - Dr Miss S. சிவராசா |
| உள்ளக கணக்காளர் | - Dr. P. பிலிப் |
| போஷகர் | - Dr. M. தேவமதுரம் J.P |

நிர்வாகசபை உறுப்பினர்களாக

| | |
|---|---|
| Dr V. பாலகிருஷ்ணன் | Dr. S. ஜானகி |
| Dr. T. கணேசமூர்த்தி | Dr. S. தங்கேஸ்வரி |
| Dr. K விக்னேஸ்வரன் | Dr. S. சரோஜினிதேவி |
| Dr. M. விக்னேஸ்வரமூர்த்தி. | |

Dr. S. பரமசிவம்பிள்ளை J. P.
தலைவர்

Dr. S. T. சிங்கஅரியரட்ணம்
செயலாளர்

வட்டுக்கோட்டை தெற்கு,
வட்டுக்கோட்டை.

இல. 551, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

(85140)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர்
க சுந்தரேசன்
அவர்களின் அன்பு மாமனார்

### கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

அவர்கள் இறையடி சேர்ந்ததையிட்டு ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல சேவைக் குழு,
உத்தியோகத்தர்கள்,
கமநல கேந்திர நிலையம்,
கீரிமலை.

(85150)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியரான
திரு. ரோய் நேசராஜ்
அவர்களின் அன்புத் தந்தையார்

### யோசப் பிரான்சீஸ்

(ஓய்வு பெற்ற அதிபர், ஹற்றன்)

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(85119)

## ஆனையிறவு பின்னடைவின் ஓராண்டு பூர்த்தி

# தண்ணீர் குடிப்பதை ஏப்ரல் 22 இல் ஒரு மணி நேரம் தவிர்க்க வேண்டும்

## பிரதி சபாநாயகர் சரத் முனசிங்க கோரிக்கை

கொழும்பு,மார்ச்9

ஆனையிறவு பின்னடைவை அடுத்து தண்ணீர் இன்றி தாகத்தால் தவித்தவாறு பல படையினர் இறந்தனர். அவர்களை நினைவு கூர்ந்து ஏப்ரல் 22 இல் நாட்டுமக்கள் ஒரு மணி நேரம் தண்ணீர் அருந்துவதை நிறுத்த வேண்டுமென்று பிரதி சபாநாயகர் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க புதன்கிழமை நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

அவசரகால நீடிப்பு பிரேரணை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தமுனைகளில் இருந்த அதிகாரிகள் சிலரின் தவறான வழி நடத்தலாலும் அரசியல்வாதிகளின் அறிவுறுத்தல்களின்படி செயற்பட்டதாலுமே கடந்த காலங்களில் படைகள் பின்னடைவு கண்டன.

தற்போது சகல இடங்களிலும் படையினர் முன்னேறி வருவதுடன் புலிகள் அதிகமாகப் பலவீனமடைந்து வருகின்றனர். இப்போது படையினர் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால் புலிகள் பின்னடைவைக் கண்டு வருகின்றனர்.

ஆனையிறவு முகாமில் 10 ஆயிரத்து 600 படைவீரர்கள் இருந்தனர். அதன் அருகே ஐந்து பெரும் கிணறுகள் மூலமே தேவையான தண்ணீர் பெறப்பட்டது.

நாம் இப்போது 300 இராணுவ வீரர்களை யுத்தத்தில் பலியிட்டு யாழ்ப்பாணத்தைப் பிடித்தோம். பிரபாகரன் காணும் ஈழம் கனவாகி விட்டது. அவரால் இனி ஈழத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது - என்றார். (க)

## கனிந்த இதயங்களைப் பெற யேசுவிடம் வரம் கேட்போம்

### தவக்காலச் சிந்தனை

### 10 ஆம் நாள்

நம்மை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்துவது நமது பகுத்தறிவும் பொறுப்புணர்வுமாகும். முழு அறிவுடனும் சுதந்திரத்துடனும் ஒருவன் செய்யும் செயல்களின் பலன் அவனையே சாரும்.

நம்மைப் படைத்த இறைவன் நமது பலவீனங்களையும் அறிவார். ஒருவன் செய்யும் செயல்களுக்கு இன்னொருவனுக்குத் தீர்ப்பு வழங்க மாட்டார். நாம் பாவத்தில் வீழ்கின்ற போதெல்லாம் எம்மைத் தூக்கிவிட முன்வருகின்றார். எனவேதான் "மனிதன் தன் தீய வழியை விட்டு மனம் திரும்பி உயிர் வாழ வேண்டும் என்பதல்லவா நமது விருப்பம்" என்கிறார் இறைவன்.

இன்று யுத்தத்தின் கொடூரப் பிடியில் சிக்குண்டு இருக்கும் நாம் மிருகங்களையும் விட கேவலமான நிலையில் வாழ்ந்து வருகின்றோம். எமது சிந்தனை, சொல், செயல்களினால் பிறருக்கு தீர்ப்பளிக்கிறோம். பொய்ச்சாட்சி, கொலைவெறி, சாதி வேறுபாடு, எல்லைச் சண்டை இவற்றிற்கெல்லாம் தூது செல்கின்றோம். அகதிகளோடு, அயலவரோடு பகைக்கின்றோம்.

ஆனால் இறைமகன் விரும்புவது சமாதானத்தையே. ஒற்றுமையையும் சமாதானத்தையும் வலியுறுத்தி நிற்கிறார். "முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்து கொள்" என எமது கடின மனங்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

எனவே மனமாற்றத்தின் காலமாகிய இத் தவக்காலத்தில் எம் சகோதரர்களை, அயலவர்களை அவர்களின் குறைநிறைகளோடு, ஏற்றத்தாழ்வுகளோடு ஏற்று வாழ கடின மனங்களை உடைத்து கனிந்த இதயங்களைப் பெற யேசுவிடம் வரம்" கேட்போம்.

மரியா.அ.

## மகேஸ்வரனின் கையொப்பம் குறித்து

# ஆளும் கட்சி – எதிரணியினர் சபையில் கடும் வாக்குவாதம்

கொழும்பு,மார்ச்9

விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டன் தடை செய்யக்கூடாது என்று கோரி யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய கையெழுத்துப் போராட்டத்தின் போது ஐ.தே.கட்சியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் மகஜரில் கையொப்பம் இட்டது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அரைமணி நேரம் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

ஐ.தே.கட்சியின் எம்.பி.ஒருவர் அந்த மகஜரில் கையொப்பம் இட்டதன் மூலம் புலிகளை பிரிட்டன் தடை செய்யக் கூடாது என்று அவர் கோரியுள்ளார் என்றும் -

புலிகளைத் தடை செய்வதாக பிரிட்டன் அறிவித்த பின்னரும் அது குறித்து ஐ.தே.க. மௌனம் சாதிக்கிறது என்றும் - அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன குரல் எழுப்பினார்.

அதைத் தொடர்ந்து அரச தரப்பினருக்கும் எதிர்த்தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதங்கள் இடம்பெறறன. (ம-3)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



மார்ச் 10 இல் பொன்விழாக் காணும்

### உயர்திரு.க.தேவராஜா

(வணிகத்துறைத் தலைவர் - யாழ்.பல்கலைக்கழகம்)

நிறைந்த சேவையில் நின்னை உயர்த்தி
உறைந்து அதையே உன்பணி ஆக்கி
சிறந்து நிற்கும் தேவா பொன்விழா
திறந்த மனத்துடன் ஏற்று வாழி!

(84704)

ஈசன் கல்வி நிலையம்,
கோண்டாவில்.

இயக்குநரும்,
ஆசிரியர்களும்.


## காங்கேசன் தடுப்பு முகாமில் இருவர்

யாழ்ப்பாணம்,மார்ச்9

காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்பு முகாமில் கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் சிறுவன் ஒருவனும் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பொலீஸார் அறிவித்துள்ளனர்-

கிளிநொச்சியைச் சேர்ந்த சரவணமுத்து சிவானந்தன் (வயது 23), நவரட்ணராஜா நிமல் (வயது 14) ஆகியோரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எங்கு, எப்போது கைது செய்யப்பட்டார்கள் என்பது பற்றி சரியான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ம-5-6)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ்.இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் இயற்றிய "சிவசக்தி அநுபூதி" என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமயப் பேரவையின் உப தலைவரும், உடுவில் பிரதேச செயலருமான ஆ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டு விழாவில் தொடக்கவுரையை பேராசிரியர் செ.பாலச்சந்திரனும், நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயரும் நிகழ்த்துவர். மதிப்பீட்டுரையை முன்னாள் அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரையும், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் மற்றும் சிவஸ்ரீ தி.பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆகியோரும் நிகழ்த்துவர்.

வாழ்த்துரையை இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி, சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத் தலைவர் த.பரம்சோதி ஆகியோர் நிகழ்த்துவர். (ம-7)

## கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை குளப்பிட்டியில்

யாழ்ப்பாணம்,மார்ச்9

கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலை புதன்கிழமை முதல் கே.கே.எஸ் வீதியில், குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கைதடியில் இருந்து இடம்பெயர்ந்த பின்னர் இந்த வைத்தியசாலை இதுவரைகாலமும் மானிப்பாயில் இயங்கி வந்தது. (ம-7)

## 3 படையினர் காயம்

கொழும்பு,மார்ச்9

கிளாலி கடலேரியின் மேற்குப் பகுதி முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் மூன்று படையினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அதேதினம் வரணியில் விடுதலைப் புலிகளின் ஒரு குழுவுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ-3)

## தெய்வீக ஸ்தலங்களில்...



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் கந்தபுராண படனத்தை ஆற்றிவரும் இ.நன்னித்தம்பி சிவசண்முகவடிவேல், கணேசன் ஆகியோருக்கு ஆலய பிரதம அர்ச்சகர் பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஷ்ண சர்மா காளாஞ்சி கொடுத்து கௌரவிப்பதைக் காணலாம். (ம-133)



யாழ்.சத்திரத்துச்சந்தி ஞானவைரவர் தேவஸ்தானத்தில் யாழ். திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகத்தினால் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை ஒலிப்பதிவுப் பேழை அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஒலிப்பதிவு நாடாவில் பாடல்களைப் பாடியுள்ள தேவார இசைமணி அருளிசையரசு தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனுக்கு யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். தலைமை வகித்த யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ணஐயர், கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குரு பீடாதிபதி ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள் ஆகியோரும் உடனிருக்கின்றனர். (ம)



மலேசியா, சிலிம்ரிவரில் எழுந்தருளியிருக்கும் மகாலட்சுமி கோயில் கும்பாபிஷேகம் கடந்த மாதம் நடைபெற்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் தமிழக, மலேசிய, ஈழத்துச் சிவாச்சாரியார்கள் நாற்பது பேர் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைத்தனர். கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம். (அ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

154, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த T.சிவானந்தன் என்பவருடைய ஒரு சங்கிலியும் இரண்டு மோதிரமும் யாழ்.அரசடி பிறவுண் வீதிச் சந்திக்கும் யா/இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் 07.03.2001 அன்று காலை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (85076)

கமலாசினி வித்தியாலயம, விடத்தல்பளையைச் சேர்ந்த செல்லையா சுபாகரன் என்பவருடைய விசேட அ. அட்டை (இல.091042196) 01.03.2001 இல் நெல்லியடிக்கும் விடத்தல் பளைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் ப.நோ.கூ.சங்க சிற்றுண்டிச்சாலையில் ஒப்படைத்துதவவும். (85125)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அம்பலவாணர் மதன்குமார் என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0901004737) 05.03.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 105, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (85057)

## வீடு விற்பனைக்கு

இல.148, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையில் கடையுடன் சேர்ந்து அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்கு உண்டு. திரு.திருமதி இராஜதுரை, தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: 075-331064 (C/15566)

## விற்பனைக்கு

நல்ல இன ஜேஸி இன நாம்பன் மாடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சண்முகாலயா முருகமூர்த்தி கோவிலடி, உடுவில். (85096)

வீட்டுத்தளபாடங்கள், அரிவுப் பட்டடை, வூஸ்லி மெசின், ஜெனெரேற்றர் ஹொண்டா 650 T.V 2072 SONY, FAN பெரிய சைக்கிள், சிறிய சைக்கிள், எல்மோ புறொஜெக்ரர், றேடியோ RX, கமெரா, கிளாஸ், செரமிக் பொருள்கள் முதலிய இன்னும் பல பொருள்கள் விற்பனைக் குண்டு. தொடர்பு: 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (85097)

யாழ்.இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக 1 **1/4** பரப்பு 3 குழி காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.வித்தியானந்தன், 384, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். (84986)

தரமான யமகா **(News Mate)** விற்பனைக்குண்டு. தொடர்பு: N.பத்மதேவா, சுதுமலைச் சந்தி, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். **Tel No** 3406. வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். (85046)

குளிர்சாதன **DAN FOSS Tecum,** கொம்பிறசர்கள், தேமோஸ்டட், செப்புக் குழாய்கள், கொண்டென்சர்கள், **FAN** கள், ஒட்டுக்கம்பிகள், பில்டர்கள், பிரியோன் **GAS** என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: **SAIRAM, 101, PALALY ROAD, JAFFNA.** (85122)

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகட்டில் தயாரிக்கப்பட்ட புதிய டீப் பிறீஸர் **(DEEP FREEZER)** விற்பனைக் குண்டு. தொடர்பு முகவரி: இல.10, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (85120)

## கைவரைப் பலன்

கல்வி, தொழில், வெளிநாடு, வாழ்க்கை முன்னேற்றம், காதல், திருமணம், அதனோடு தொடர்புள்ள சிக்கல்கள் ஆகியனவற்றைப் பற்றி தெளிவாக அறிய உங்கள் கைவரைகளை ஆய்வுக்குட்படுத்துங்கள். 7, அய்யனார் கோயிற் தெரு, வண்ணார்பண்ணை. (85052)

## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர், கல்பேட்ஸ் தேவை. தொடர்பு: தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) (85113)

## தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு. நன்கு சமையல் தெரிந்த வீட்டுப் பணிப் பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: விளம்பர இல. 1232, மே/பா உதயன். (85024)

## 43 மாணவர்கள் சுற்றுலா புறப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்9

தென்பகுதிக்கான கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்.மாவட்ட பாடசாலை மாணவ, மாணவிகள் 43 பேரும் 5 ஆசிரியர்களும் நேற்று விமானமூலம் கொழும்பு சென்றனர்.

## 160 தபாற்பொதிகள் நேற்று வந்தன

யாழ்ப்பாணம்,மார்ச்9

காங்கேசன்துறைக்கு நேற்றுவந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 160 தபாற்பொதிகள் எடுத்துவரபபட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால் அடங்கிய 72 தபாற்பொதிகள் அனுப்பிவைக்கப் பட்டதாகத் தபாற்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (க-10)

## கோப்பாய் - கைதடி வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்9

கோப்பாய் - கைதடி வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப் பட்டு தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

அதன் முதற்கட்டமாக வீதியின் இருமருங்கிலும் உள்ள பூட்புதர்கள், பற்றைகள் என்பவற்றைத் துப்புரவு செய்யும் பணி நடைபெறுகிறது.

அத்துடன் கோப்பாய் பாலத்தின் திருத்த வேலைகளுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (க-10)

## உரும்பிராயில் பௌர்ணமி தின நிகழ்வு

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் மன்றம் பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியன இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு உரும்பிராய் ஓடயம்பதி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் மன்றத் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன. (க-10)

## கிரிக்கெட் போட்டி

திருநெல்வேலி, 'திறீஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கிரிக்கெற் சுற்றுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8மணியளவில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. மைதானத்தில் ஆரம்பமாகின்றன. (ஒ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**நாளை (10.03.2001) சனிக்கிழமை பொன் விழாவைக் கொண்டாடும்**




**உயர்திரு.க.தேவராஜா**

*(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)*

உள்ளத்தால் உயர்ந்து நிற்கும் ஒப்பில்லா தேவன் நீயே!
கள்ளமில்லா நெஞ்சத்தின் கலங்கரை விளக்கம் நீயே
அள்ளி அள்ளி வழங்குகின்ற அளவற்ற செல்வன் நீயே
பள்ளியதாம் பிற்மன்ஸ் கல்வி நிலையத்தால் வாழ்த்துகின்றோம்.
வாழி! வாழி!! வாழி!!!

**பிற்மன்ஸ் கல்வி நிலைய இயக்குநர்கள்,**
பாலா, ராஜன்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
*மானிப்பாய்.* (85115)

## நூல் வெளியீட்டு விழா



எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தியின்
"கலைஞானியும் கலைத்தொண்டும்"

**இடம்: வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய.**

காலம்: இன்று (09.03.2001) வெள்ளிக்கிழமை மு.ப.9.30 மணி.

தலைமை: திரு.ஆ.சி.நடராஜா அவர்கள்



மாமனிதரை வாழ்த்தத் திரண்டு வாரீர்

**"கலைஞானி கலைக் கூடம்"**
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

கலைஞானி அ.செல்வரத்தினம்
நிறுவுநர்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
பொதுச் செயலாளர்.

"உயிரைக் கொடுத்தும் தமிழைக் காப்போம்"

(85131)

## A/L 2001

**கணக்கீடு**

திரு.பாலவாசன்
B.B.A (F.M.Spl)

முகாமைக் கணக்கீடு
**SAT, SUN 8-10 A.M**
ஆரம்பம்:
**10.03.2001 8 A.M**

வித்ஸா
கல்வி நிறுவனம்

(85111)

## புலவர் ம.பார்வதிநாதசிவத்தின் பசிப்பிணி மருத்துவன் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

இடம் : **யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்**
காலம்: 11-03-2001 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி (புதிய நேரம்)
தலைவர்: **செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன்** அவர்கள்

**விழா நிகழ்ச்சிகள்:-**

| | | |
|---|---|---|
| மங்கள விளக்கேற்றல்: | | |
| இறைவணக்கம் | | |
| வரவேற்புரை | : | பா.மகாலிங்கசிவம் |
| தலைமையுரை | : | |
| ஆசியுரை | : | சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் |
| வெளியீட்டுரை | : | ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள் |
| முதற்பிரதி வழங்கல் | : | |
| முதற்பிரதி பெறுவோர் | : | திரு.ஹலக் விஸ்வநாதன் அவர்கள் (ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்) திரு.கா.கணேசமூர்த்தி அவர்கள் (ஓய்வுபெற்ற வங்கி லிகிதர்) திரு.பொ.இராசேந்திரம் அவர்கள் (கிராம உத்தியோகத்தர், இளவாலை வடக்கு) |
| ஆய்வுரை: | | திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் (உதவிக் கல்விப்பணிப்பாளர்) கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் (தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |
| ஏற்புரை | : | நூலாசிரியர் |
| நன்றியுரை | : | பா.பாலமுரளி |
| தமிழ்த்தாய் வாழ்த்து. | | |

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

(85123) - ம.பார்வதிநாதசிவமும் குடும்பத்தினரும்.

## CONDOLENCE MESSAGE

**We express our heartfelt condolences to Mr.G.AMALATHASAN (CO-ORDINATOR of Regional English Support Centre - Jaffna) and to his Family members, during the time of bereavement at the loss of their beloved Father.**

**Mr.D.GABRIEL, Retired Teacher**
**of**
**Kachchai, Chavakachcheri.**

"MAY HIS SOUL REST IN PEACE"

***J/Vembadi Girls' High School, Jaffna.*** (85139) **The Staff RESC-Jaffna**

## TENDER NOTICE

**DEPUTY PROVINCIAL DIRECTOR OF HEALTH SERVICES, JAFFNA**
**SUPPLY OF COMPUTERS & MEDICAL EQUIPMENTS ETC.**

**The Deputy Provincial Director of Health Services. Jaffna invites sealed quotations upto 12.30 p.m. on 4th April, 2001 for supply of the following items:**

**1. Computer**

| (I) Lab top | Desk Top |
|---|---|
| Processor - Pentuim III | Pentuim III |
| Speed - 450MH3 of abop. | 800 MHZ 1000 MHZ |
| Ram - 64 MB | 64 MB - 128 MB |
| Hard disk - 6 GB | 15 GB - 25 GB |

**with UPS, Scanner, printer (Dot matrics/Lazer printer)**

**(II) Medical Equipments to Dental Unit**

1. Dental compresser 75/150 Bambi, U.K.
2. Ultra sonic (scaler Bobcat)
3. Composite curing light (Light cure machine)

**(III) Generators 5KVA, 6KVA, 8KVA (Specify make)**

**(IV) Telephone system (Intercom) (i). 10 - 15 Ext. (ii). 25-50 Ext with compatible components.**


**The sealed Quotations should be sent under registered cover on or before 12.30 p.m. on 4th April, 2001 addressed to Deputy Provincial Director of Health Services, Jaffna. The envelope should be sealed and marked Tender for supply of ........................................**

**Tenders will be opened immediately after closing of Tenders at 12.30 p.m. on the said date and Tenderers or their authorised representatives are permitted to be present when tenders are opened.**

**For further detail please contact DPDHS., Jaffna. Please quote your price with G.S.T.**

**Dr.U.SIVAPADASUNDARAM**
**DPDHS., Jaffna.** (C/15610)

# கொக்குவில் இந்துவின் மைந்தனும் யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவரும் பொதுநல சேவையாளனும் ஆகிய பொன்விழாக் காணும் தேவாவுக்கு கொக்குவில் சமூகத்தின் பாராட்டுக்கள்



**கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் அவர்களின் உள்ளத்திலிருந்து....**

## சேவைக்கு விழா

துறைசார் வல்லுநர்கள் பலர் உள்ளனர். திரு க.தேவராஜா அவர்களும் வணிகத்துறைசார் வல்லுநர். நிதிசம்பந்தமான பல



நிறுவனங்களின் சபைகளில் உறுப்பினர். இவை மட்டுமே அவரிடம் காணப்படும் சிறப்பியல்புகளாயின் அவருக்கின்று விழா எடுத்திருப்போமா? அவரிடம் மேலோங்கி நிற்பது சேவை மனப்பாங்கே! பிறருக்கு உதவ வேண்டுமென்ற உணர்வு. ஒருவரின் அந்தஸ்தினை நோக்காமல், எல்லாருடனும் ஒரேவிதமாக அன்பாக பழகும் பண்பு, இப்பண்பு ஒரு சிலரிடம் மட்டுமே காணப்படும். இவ்வரிய பண்புகளின் உறைவிடமான திரு.தேவராஜா அவர்கள் பல நண்பர்களையும் அபிமானிகளையும் நன்றியுள்ள உள்ளங்களையும் விசுவாசமான பல மாணவர்களையும் தேடிக்கொண்டுள்ளார். இவர்களே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேவாவுக்கு விழா எடுத்து மகிழ முன்வந்துள்ளனர். தேவா நீடூழி வாழ்க

- *அ.பஞ்சலிங்கம்.*

---

**கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி**

## சிறந்த பண்பாளர்

**திரு.கந்தையா தேவராஜா**
**(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)**



கொக்குவில் இந்துவின் மைந்தனாய்
பல்கலையும் கற்றுப் பல்தேர்ச்சியுமுற்றுப்
பற்பல சேவையாற்றும் தேவனாய்
பல பணிகள் மென்மேலும் தொடர்ந்திட
எம் அன்னைசார் உலகம்
என்றென்றும் உம்மை வாழ்த்தும்.

- *பொ.கமலநாதன்*

---

**கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் இதயத்திலிருந்து......**

## சமூக சேவையாளன்

நண்பர் க.தேவராஜாவுக்கு பொன் விழா நிகழ்வு, சகல தரப்பு மக்களாலும் மிகவும் சிறப்பாக மனமார்ந்த நல்வாழ்த்துக்களுடன் நடைபெறுகின்றது.



இந்த நிகழ்விலே கொக்குவில் இந்துவின் மைந்தனுக்கு அவரது பாடசாலை நண்பனும், கல்லூரியின் அபிவிருத்திச் சங்க செயலாளருமாகிய யான் ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

பொன்விழா நாயகன் பல்லாண்டு காலம் வாழ்வாங்கு வாழ்வதற்கு எல்லாம் வல்ல ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றேன்.

- *சிவஞானம் ஸ்ரீகணேஷன்.*

---

**ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி**

## மனிதனில் மாணிக்கம்

பொன்விழாக் காணும் திருவாளர் க.தேவராஜா அவர்கள் (வணிகத் துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்) ஒரு சிறந்த பண்பாளர், சமயப் பற்றுக் கொண்டவர். சிரித்த முகமும் நல்லிதயமும் கொண்ட 'மனிதரில் மாணிக்கம்' என்றே கூற வேண்டும். இவர் ஒரு சிறந்த கல்விமான்மட்டுமல்ல நல்லொழுக்கமும் நிறைந்த ஆசான்.



இவரும் இவரது குடும்பமும் எல்லாம் வல்ல வள்ளி தேவசேனாசமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானின் திருவருளால் நீண்டகாலம் ஒரு குறையுமின்றி வாழ முருகப் பெருமானை வணங்கி நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

சுபமஸ்து

- *சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்*

---

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை செயலாளர் அ.பற்குணன் அவர்களின் பொன்விழாச் செய்தி........**

## மனித நேயமிக்க சமூக சேவையாளன்

அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆன்மீகவாதிகள், இலக்கியவாதிகள், கலையாளர்கள், தொழிலதிபர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சமூகசேவையாளர்கள் எனத் தன் மைந்தர்கள் பல்வேறு துறைகளில் முன்னணிவகிப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறது கொக்குவில் இந்துக் கல்லூரி.



எமது இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அன்று முதல் இன்றுவரை உதவுவதில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கண்ணும் கருத்துமாயிருந்து செயற்படுகின்றது. பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளில் அதிக ஆர்வத்துடன் பங்கு கொண்டு உழைத்து வருகிறார் மதிப்பிற்குரிய திரு.தேவராஜா.

அவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் அவரைப் பழைய மாணவர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்து மகிழ்ந்தனர் எமது பழைய மாணவர்கள்.

சங்கத்தின் தலைவராகத் திறம்படச் செயலாற்றியவர். எமது கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களில் ஒருவரான ஹன்டி பேரின்ப நாயகம் அவர்களின் நினைவாகச் சிறுவர் நூலகம் ஒன்றினை உருவாக்கத் திறம்படச் செயலாற்றியமையை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

மனித நேயம் மிக்க சமூக சேவையாளன். சேவை என்பது அவர் உயிர்மூச்சு உற்றார், உறவினர், நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று பாராது எந்த உதவி கேட்டாலும் தயங்காது முன்னின்று உதவுபவர் திரு.தேவராஜா. கேட்காமலே கெஞ்சாமலே தேவை அறிந்து ஓடிச் சென்று உதவிகள் செய்யும் பெருமகன். இணுவிலில் லயன்ஸ் கழகம் அமைத்து அதன் முதல் தலைவராக தெரிவுசெய்யப்பட்டவர் லயன் தேவா.

இன்முகம், இன்சொல், நற்செயல், அடக்கம் என்பன அவரது அணிகலன்களாகும். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் என்ற அகந்தை இன்றிப் பழகுபவர். அவரது ஆற்றல் அளவிடற்கரியது. ஆளுமை மகத்தானது. வியத்தகு வணிக விற்பன்னர். நல்லதொரு அறிஞர் குழாமை உருவாக்கும் வல்லவர் லயன் தேவா அவர்கள்.

தெய்வ பக்தியும் திருத்தொண்டும் அவரது சிறப்பியல்புகளாகும். எல்லாவற்றிற்கும் மேலாகக் கொக்குவில் இந்துக் கல்லூரி மீது அவர் வைத்திருக்கும் அன்பும் ஆர்வமும் மகத்தானது.

திறமை மிக்க தேவா அவர்களும் அவரது குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் பெரு வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

- *அ.பற்குணன்.*

---

**கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் இ.மகேந்திரன் அவர்களின் எண்ணக்கருவிலிருந்து.....**

## அற்புதமான பண்பாளர்

தேமதுரத் தமிழ், தேடித்தேடி அறிவைப் பெறும் ஆர்வம், தேவைக்கேற்ப செயற்படும் திறமை, தேர்வுகளில் முதனிலை, தேர்ந்த செயற்பாடுகள் - "தேவராஜா" - என்ற திறமைமிகு மாணவன்.



கொக்குவில் இந்துக் கல்லூரியில் தேவராஜா மீது அன்பு காட்டாத ஆசிரியர்களும் மாணவர்களும் இல்லவே இல்லை. அன்று முதல் பல்கலைக்கழக வணிகத் துறை தலைவராகிய பின்பும் அவரது நற்பண்புகளும் நல்லியல்புகளும் மாறவே இல்லை. தனது ஆசிரியர்கள் மீது அவர் காட்டும் அன்பும் பாசமும் அற்புதமானவை. எமது கொக்குவில் இந்துவை அவர் மிகவும் நேசித்தார் - நேசிக்கின்றார். கொக்குவில் இந்து நமதே என்று முழு மனதுடன் பணி செய்தார். பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக மிகவும் விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டார். அவரது வாழ்க்கை முறை, நல்லியல்புகள் எமது இளைய தலைமுறையினருக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். அந்த அற்புதமான பண்பாளரை எனது (எமது) மாணவன் என்று சொல்வதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

அவரும் அவரது குடும்பத்தினரும் நலம்பெற்று நீடுவாழ எல்லாம் வல்ல எம் பெருமான் அருள்புரிவாராக.

- **சுடர் இ.மகேந்திரன்.**

---

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் இ.நடராசா அவர்களின் சிந்தனையிலிருந்து.....**

## ஏழையின் பங்காளன்

கொக்குவில் இந்துவின் மைந்தன் "தேவா"வுக்கு ஐம்பதாவது அகவையொட்டி "பொன்விழா"வினை ஊர் மக்கள் கூடி கொண்டாட இருப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.



கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் இரண்டு தடவைகள் தலைவராகவும், ஹன்டி பேரின்ப நாயகம் அவர்களின் கொக்குவில் இந்து நூற்றாண்டு விழா சபை தலைவராகவும் இருந்து பல சேவைகள் புரிந்ததை கொக்குவில் சமூகம் மறக்க முடியாது. பொன்விழா காணும் நாயகன் தேவாவும், அவரது குடும்பமும் சகல பேறுகளும் பெற்று பல காலம் வாழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

- *இ.நடராசா.*

---

**அவரும் அவரது குடும்பமும் பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூற்றாண்டு காலம் சகல செல்வங்களையும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.**

# உளங்கனிந்த உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



## உயர்திரு.சு.திசநாயகம்பிள்ளை (J.P)

(ஆசிரிய ஆலோசகர், தீவக கல்வி வலயம்)

வேலணை வங்களாவடி முருகன் ஆலய பரிபாலனசபை உறுப்பினரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணை பிரிவுத் தலைவரும், வேலணை ப.நோ.கூ.சங்கத்தின் தலைவருமான

**உயர்திரு. சு.திசநாயகம்பிள்ளை** அவர்கள்

யாழ்.மாவட்ட சமாதானநீதிவானாக அண்மையில் நியமனம் பெற்றுக் கொண்டமையையிட்டும் சமய, சமூக, கூட்டுறவுப் பணிகளில் முன்னின்று சேவையாற்றும் இவரது சேவைகள் மேன்மேலும் தொடர வேண்டும் என எல்லாம் வல்ல எம் பெருமானை வேண்டி உளம் கனிந்த உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வேலணை ப.நோ.கூ.சங்கம்,
வேலணை.

(85095)

# அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு யுனிசெவ் ஆதரவுடன் சுகவாழ்வு நிலையம் நடத்தும் மகளிர் தினம்

பிரதம விருந்தினர்
**திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, தலைவர், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்
**திருமதி டாக்டர் ஜெ.கணேசமூர்த்தி**
(தலைவர், மருத்துவத்துறை - யாழ்.போதனாவைத்தியசாலை)

**திருமதி லிங்கா துரைராஜா**
(சட்டத்தரணியும் நொத்தாரிசும், சத்திய ஆணையாளரும், மக்கள் வங்கி ஆலோசகரும்)

காலம் – **நாளை (10.03.2001) சனிக்கிழமை**
நேரம் – பிற்பகல் 2.30 மணி (இலங்கை நேரம்)
இடம் – **கைலாசபதி கலையரங்கு, யாழ்.பல்கலைக்கழகம்.**

### நிகழ்வுகள்

- இசை மங்களம் - திரு.தீபன் கணேசதுரை
- சிறுகதைப் போட்டிக்கான பரிசில் வழங்கல்
- கவிதா நிகழ்வு:- *நெறியாள்கை* திருமதி பகீரதி கணேசதுரை.
- நாடகம் - "உயிருள்ள நிலவுக்குள்"
*நெறியாள்கை* திரு.ச.கிருபானந்தன்.
- நாட்டிய நாடகம்:- "உதயனைத் தடுத்த உத்தமி"
*நெறியாள்கை:-* திருமதி மோகனா பாலசுப்ரமணியம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந் நிகழ்விற்கு கைலாசபதி கலையரங்கை ஒழுங்குபடுத்தித் தந்த யாழ்.பல்கலைக்கழக கலைவட்டத்தினருக்கு எமது நன்றிகள்.*

சிறுகதைப் போட்டிக்குரிய பணப் பரிசில்களைத் தந்துதவிய

| | |
|---|---|
| ராஜா கிறீம் ஹவுஸ் | லிங்கநாதன் அன் கோ |
| சன்லைட் றைக்கிளீனர்ஸ் | ஆனந்தி பான்சி ஹவுஸ் |
| சிற்றி பாமா | ராகம்ஸ் பட்டுச் சோலை |
| சிற்றி மெடிக்கல்ஸ் | நிஷாந்தனா நகை மாடம் |

அமுல் கிறீம் ஹவுஸ் அன்ட் பேக்கரி
சந்தியா மல்ரி கோட் யாட்

ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்!

(85093) - *செயலர்*

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், சமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர்
திரு.க.சுந்தரேசன் அவர்களின் மாமனார்

## கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

அவர்கள் 06.03.2001 செவ்வாயன்று காலமாகிவிட்டார். அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

சு.புத்திசிகாமணி,
*பளை பிரதேச செயலர்,*
சி.பாலசுந்தரம்,
கிராம *உத்தியோகத்தர், பளை.*

(85098)

## அன்பளிப்பு

ஊர்காவற்றுறை, மார்ச் 9

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம், புனித மரியாள் பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 'உதவிக் கரங்கள்' திட்டத்தின் கீழ் அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் என்பன அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மேற்படி சங்கத்தின் தீவக கிளைத் தலைவர் வ.அஞ்சலோ இவற்றை மாணவர்களுக்கு வழங்கினார்.

(ம-16)

## காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்9

தொண்டமனாறு பகுதியில் இடம்பெற்ற கார் விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் காலை உயிரிழந்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இராஜரட்ணம் நேசரட்ணம் (வயது 41 தொண்டமனாறு) என்பவரே நேற்று முன்தினம் உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ம-5-6)

## மதில் வீழ்ந்து படுகாயம்

தென்மராட்சி, மார்ச் 9

துரத்தி வந்து நாயிடமிருந்து தப்புவதற்காக மதிலால் ஏறிப் பாய்வதற்கு முற்பட்ட வேளையில் அந்த மதில் உடைந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்த ஒருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு அண்மையில் உள்ள ஒழுங்கையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புலோலி கிழக்கைச் சேர்ந்த மாணிக்கம் செந்திவேல் (வயது 40) என்பவரே காலில் படுகாயமடைந்தவராவார்.

(ம-117)

## செயலமர்வு ரத்து

தென்மராட்சி, மார்ச் 9

நாளை சனிக்கிழமையும் மறு நாள ஞாயிற்றுக்கிழமையும் நடை பெறவிருந்த தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 7 வகுப்புக்களில் சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இரத்துச செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-117)

# பாராட்டு விழா



எமது ஜனசக்தி சனசமூக நிலையத் தலைவர்

## திரு. வ.தம்பித்துரை

அவர்களுக்கு யாழ். மாவட்ட சமாதான நீதிவான் (J.P.) பட்டம் வழங்கப்பட்டதையிட்டு அவரை கௌரவித்து பாராட்டு முகமாக 09.03.2001இல் எமது நிலையத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பதோடு, அவரது பணி மேலும் சிறக்க எமது நல்லாசிகளையும் வழங்குகின்றோம்.

நன்றி!

ஜனசக்தி சனசமூக நிலையம்,
அரசடி வீதி, நல்லூர்.

- நிலைய நிர்வாகம்.

(85109)

# பிரதீப் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய
சிரேஷ்ட மாணவ தலைவன்
அமரர் **கணபதிப்பிள்ளை பிரதீபனின்**
**(SENIOR PREFECT - 1997)**

**நான்காம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி நடத்தப்படும் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி.**

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் 20.03.2001 இற்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்பு கொள்ளும் முறை:-*

1. நேரடியாக - கழக அலுவலகத்தில்
2. தபால் மூலம் - S.K.பிரபாகரன்
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
3. தொலைபேசி மூலம்: 021-2955

குறிப்பு:- **(OVER GAME, SETUP GAME,** தனித்தனியாக நடத்தப்படும்)

*பி.வி.க.* - தலைவர்
*மூர்த்த நயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.*

*விளம்பர அன்பளிப்பு:-*

## கௌரி அழகு மாடம்

அழகு சாதனப் பொருள்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வகைகள், தையல் நூல், பட்டன் வகைகள், பாடசாலை உபகரணங்கள், லேஸ் வகைகள் மொத்தமாக நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

*இல.316, கே.கே.எஸ். வீதி,* *யாழ்ப்பாணம்.*
T.P.-021-3227

(85124)




இலகுவானது, பாதுகாப்பானது, பயனுள்ளது, பேன்களுக்கெதிரான நிவாரணி. *வாரம் ஒரு தடவை* தொடர்ந்து பாவித்துவரின் உங்களினதும் பிள்ளைகளினதும் கேசத்தில் *பேன்களையும் ஈருகளையும்* முற்றாக இல்லாதொழிக்கும். தற்போது 10ml, 50ml அளவுகளில் எங்கும் கிடைக்கும்.

**Hemas Marketing (pvt) Ltd.** ஊடாக விநியோகிப்பவர்கள்:

## *றூபா பன்முக வர்த்தகம்*

104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி15511)

# சீனாவில் வெடிவிபத்து; 41 குழந்தைகள் பலி!

பெய்ஜிங், மார்ச் 9

சீனாவில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 41 குழந்தைகள் உயிரிழந்தனர். மேலும் 27 பேர் காயமடைந்தனர்.

நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள மியான்சி மாகாணத்தின் வொவ்வாய் கவுண்டியில் உள்ள ஆரம்பப் பாடசாலையிலேயே நேற்று முன்தினம் இந்த வெடிவிபத்து நிகழ்ந்ததாக சீனச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது:

காலையில் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்த இரண்டு மாடிக்கட்டடத்தின் தளப்பகுதியிலிருந்து பாரிய வெடிச்சத்தம் கேட்டதாகவும்—

அந்தச் சத்தத்தை அடுத்து, அந்தக் கட்டடத்தொகுதி இடிந்து தரைமட்டமானதாகவும்—

விபத்தில் உயிர் தப்பிய ஆசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து 41குழந்தைகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன; 27 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டடம் இடியக் காரணமான வெடிவிபத்து வெடிகுண்டினால் ஏற்பட்டிருக்க வாய்ப்புகள் குறைவு என்றும்—

வாணவேடிக்கைக்கு பயன்படுத்தப்படும் வெடிமருந்துகள் சேமித்து வைக்கப்பட்டிருந்து, அவற்றால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் பிரதேச நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ)

# கரு பரிசோதனைத் தடை குறித்து இந்திய நீதிமன்றத்தில் விசாரணை

புதுடில்லி, மார்ச் 9

பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைக் கண்டறிய நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனைகளை தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து 4 வாரங்களுக்குள் வாக்குமூலங்களைச் சமர்ப்பிக்குமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அரசுகளுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை நிறைவேற்றத் தவறினால் கடமை தவறிய குற்றத்துக்காக அரசுகளின் தலைமைச் செயலர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவார்கள் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

மருத்துவ பரிசோதனைகளில் பெண்குழந்தை என்பது தெரியவந்தால் கருவிலேயே அவை அழிக்கப்படுவதாகவும்—

இதனால், இந்தியாவில் ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்களின் எண்ணிக்கை அச்சமூட்டும் வகையில் குறைந்து வருவதாகவும்—

குறிப்பிடப்பட்டுத் தாக்கல் செய்யப்பட்ட பொது நலமனு மீதான விசாரணையிலேயே உச்சநீதிமன்றம் மேற்கண்ட ஆணையைப் பிறப்பித்துள்ளது.

(ஒ-7)

## ஆஸ்திரேலிய விமான நிலையங்களில்

# பிரிட்டனிலிருந்து வருபவர்களுக்கு நோய்க்கிருமிப் பரிசோதனை

சிட்னி, மார்ச் 9

பிரிட்டனில் இருந்து வரும் பயணிகளை தனிமைப்படுத்தி மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளால் ஆஸ்திரேலிய விமான நிலையங்களில் காலதாமதங்கள் மற்றும் நெருக்கடிகள் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டனில் கால்நடைகளை மோசமாகப் பாதித்து வரும் வைரஸ்நோய் மனிதர்கள் அணிந்துள்ள உடைகள் மூலமும் பரவுவது கண்டு பிடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, பிரிட்டனில் இருந்து வரும் பயணிகளையும், சமீபத்தில் பிரிட்டனில் பயணித்து விட்டு பின்னர் வேறு நாடுகளுக்கும் சென்று வந்தவர்களையும்' ஆஸ்திரேலிய விமான நிலையங்களில் தனிமைப்படுத்தி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, கிருமிகள் இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பின்னரே அவர்கள் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

கடந்த 3 மாதங்களாக கடைப்பிடிக்கப்படும் இந்த நடைமுறையால் விமான நிலையங்களில் நெருக்கடியும் காலதாமதமும் ஏற்படுவதாக பயணிகள் முறையிட்டு வரும் போதும் சோதனைகளை நிறுத்த ஆஸ்திரேலியா மறுத்துள்ளது.

இந்த ஆண்டு சுமார் 10 லட்சம் பேரை சோதனை செய்ய வேண்டியிருக்கும் எனக் கூறப்படுகிறது.

(ஒ-ம-7)

# பணயக்கைதிகளை மீட்க இராணுவம்

டாக்கா, மார்ச் 9

பங்களாதேஷில் சிட்டகொங் மலைப் பகுதியில் பழங்குடியினரால் பணயம் வைக்கப்பட்டுள்ள 3 ஐரோப்பியர்களை விடுவிக்க ராணுவ நடவடிக்கை மேற்கொள்ள பங்களாதேஷ் அரசு முடிவு செய்துள்ளது.

# ஹஜ்பெருநாளன்றும் தலிபான்கள் சிலை உடைப்பை தொடர்ந்தனர்

ஆப்கானிஸ்தானில் இஸ்லாமியர்களின் புனித தினமான ஹஜ் பெருநாளையும் பொருட்படுத்தாமல் புத்தர் சிலைகளையும் புராதனச் சின்னங்களையும் தகர்த்து அழிப்பதில் தலிபான்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது

பாமியான் மாகாணத்தில் மலைப் பாறைகளில் செதுக்கப்பட்டிருந்த இரு பிரமாண்டமான புத்தர் சிலைகளையும் ஹஜ் பெருநாளான கடந்த 6 ஆம் திகதி ஏவுகணைகள், டாங்கிகள் மற்றும் வெடிப்பொருள்களைப் பயன்படுத்தி தலிபான்கள் தகர்த்தனர்.

குறிப்பிட்ட இரு சிலைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பகுதிகள் தகர்க்கப்பட்டு விட்டதாகவும் முற்றாக தகர்த்து அழிக்கும் வரை உடைப்புப் பணிகள் தொடரும் என்றும் — பாகிஸ்தானிற்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் அப்துல் சலாம் சஜீவ் தெரிவித்தார்

சிலைகளை உடைக்காமல் அவற்றுக்கு முன்பாக பாரிய சுவர்களை எழுப்புமாறு முன்வைக்கப்பட்ட யோசனையை தலிபானின் ஆன்மீகத் தலைவர் முல்லா மொஹமட் ஓமர் நிராகரித்து விட்டதாகவும் சஜீவ் கூறினார். (ஒ-7)

## தமிழக அரசியலில்...

## "ராஜ் ரி. வி." கருத்துக்கணிப்பில்

# மூன்றாவது அணி அமைய பெரும்பாலானோர் ஆதரவு

சென்னை, மார்ச் 9

தமிழக சட்டசபைத் தேர்தலில் மூப்பனார் தலைமையில் மூன்றாவது அணி ஒன்று உருவாகவேண்டும் என்று பெரும்பாலான மக்கள் விரும்புகிறார்கள்.

தமிழக தனியார் தொலைக்காட்சி நிறுவனமான "ராஜ் ரி.வி." நடத்திய கருத்துக்கணிப்பில் இது தெரிய வந்துள்ளது.

நாடு முழுவதும் வாழ்கின்ற தமிழர்களில் பலரை தொடர்பு கொண்டு நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் மூப்பனார் தலைமையில் மூன்றாவது அணி அமைவதை விரும்புவதாக 58 9 சதவீதம் பேர் கருத்துத் தெரிவித்துள்ளதாக ராஜ்டிவி கூறியது.

இந்தக் கருத்துக் கணிப்பு வெளியாகிய தருணத்திலேயே ஜெயலலிதா, த. மா. கா. மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு அதிகம் விடுக் கொடுக்க முன்வந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

# தமிழ் நாட்டு அரசியலில் மற்றொரு கட்சி உதயம்

சென்னை, மார்ச் 9

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் குமரி அனந்தன் அந்தக் கட்சியிலிருந்து விலகி புதிய கட்சியை ஆரம்பித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய குமரி அனந்தன்.

காங்கிரஸ் கட்சிக்காகக் கடுமையாக உழைத்த தனக்கு கட்சி தகுந்த அங்கீகாரம் அளிக்கவில்லை என்றும் —

அதனால் தொண்டர்களின் நலன்களைக் காப்பதற்காக தொண்டர் காங்கிரஸ் என்ற புதிய கட்சியை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சாதிப் பூசல்களைத் தடுத்து நல்லிணக்கத்தை வளர்க்க தனது கட்சி பாடுபடும் என்றும் அவர் தெரிவித்தார். இக்கட்சி தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ளது.

சில வருடங்களின் முன்னரும், இவர் காங்கிரஸை விட்டு வெளியேறி புதுக்கட்சி தொடங்கிப் பின்னர் காங்கிரஸில் மீண்டும் சேர்ந்தது குறிப்பிடத் தக்கது.

(ஒ)

# மாசிமகத்தில் கடல்நீராடுவதன் மூலம் மாசகற்றி மங்கல வாழ்வு பெறலாம்

மகம் பத்தாவது நட்சத்திரமாகும். இது சிம்மராசியில் உள்ளது. மாசி மாதத்தில் மக நட்சத்திரத்தோடு கூடிய புண்ணிய காலம் மாசி மகம் எனப்படும். அத்தினத்தில் பௌர்ணமியும் கூடும்போது அதி உத்தமமாகக் கருதப்படும்.

''மடலார்ந்த தெங்கின்
மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான்
கபாலீச்சரம் அமர்ந்தான்''

என்பது ஆளுடைய பிள்ளையின் [திருஞானசம்பந்தரின்] திருவாக்கு மாசிமகத்தில் கடல் நீராடுதல் செய்து நள்ளிரவில் மகவேட்டம் காணும் விழா எனும் கருத்தைப் பொருத்தி இதில் கூறப்பட்டுள்ளது. மாசிமகப் பெருவிழா மயிலையிலே ஒரு திருவிழாவாகும். இவ்விழா அன்றும் இருந்தது என்பதற்கு இது சான்றாகும்.

## புராணம் கூறுகிறது

எந்த ஒரு விரதத்திற்கும் ஒரு பின்னணி இருக்கிறது புராண இதிகாசங்கள் மூலம் இதனை உணரலாம். மாசிமகத் தீர்த்தம் ஆடினால் பந்தங்கள் எல்லாம் அகலும் என்பர். அன்றியும் இறை நாமங்களைப் பாராயணம் செய்யக்கூடிய பக்குவத்தை உள்ளத்திற்குத் தரவும் செய்யும். ஒருமுறை வருணன் கடலில் அமிழ்ந்து துன்புற்ற போது, கண்ணுதற் பெருமான் கருணை கூர்ந்து விமோசனம் தந்த நாள் இது வென்றும் கருதப்படுகிறது. அதனால் மாசிமகத்தில் சமுத்திர நீராடினால் பாவங்கள் நீங்கி முத்திகிடைக்கும் எனவும் கூறுவர். மேலேகூறிய வருணனின் வரலாற்றை வியாக்கிரபாத முனிவர் இரணியவர்ம சக்கரவர்த்திக்குக் கூற, சக்கரவர்த்தியும் இவ்விரதத்தை அநுஷ்டித்துச் சிவனுக்குக் கொடியேற்றினான் எனப்புராண வரலாறு புகட்டுகின்றது. தர்ப்பைப்பூண்டு இவ்விரதம் அநுஷ்டிப்பதும் ஒரு வழமையாகும்.

## பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை

குரு (வியாழன்) சிம்மராசியில் இருக்கும் மாசிமாத நிறைமதி (பௌர்ணமி) நாள், மகாமக நாள் அல்லது மாமாங்கம் எனப்படும் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை குருசிம்மராசிக்கு வருவதால் மகாமகப் பெருவிழா 12 ஆண்டுக்களுக்கொருமுறைதான் வரும். கும்பமேளா இந்தவகையிற்தான். 12 ஆண்டுகளுக்கொருமுறை வடஇந்தியாவில் கொண்டாடப்படுகிறது பிரமபுராணத்திலும் பவிஷ்ய புராணத்திதிலும், இது பற்றிக் கூறப்படுகின்றது.

தமிழ் நாட்டிலுள்ள கும்பகோணம் என்ற தலம் மகாமகத்தால் பிரபல்யம் பெற்றது. இலங்கையில் மட்டக்களப்புப் பகுதியில் உள்ள மாமாங்கப் பிள்ளையார் கோயிலிலும் இது சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம், கடல் நீராடல் செய்யக் கூடிய ஆலயங்கள் இடங்களிலும் இது நடத்தப்படுகிறது.

## புண்ணிய தீர்த்தங்கள்

திருக்குடந்தைத்தல புராணத்தில் மகாமகத்தின் பெருமை விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது அதன் சுருக்கம் வருமாறு, திருக்குடந்தையிலிருக்கும் மகாமகக் குளமானது சிவபெருமான் அருளால்; பிரமன் சிருஷ்டி பீஜத்தை வைத்துக் காத்த அமிர்த குடத்திலிருந்த அமிர்தத்தினால் ஏற்பட்டது. அமிர்தவாவி என்றும் அதற்குப் பெயருண்டு. கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சரயூ, தாமிரபரணி ஆகிய நதி தேவதைகள், நீராடுவோரிடமிருந்து பெறும் பாவத்தைப் போக்கிக்கொள்ள மகாமகப் புண்ணிய காலத்தில் அமிருதவாவியில் நீராடுகின்றனர். இதனால் இதற்குக் கன்னி தீர்த்தம் என்றும் பெயருண்டு. இதில் 66 கோடி புண்ணிய தீர்த்தங்களும் ஒன்றிகின்றன. பிரமன் தனக்கு அனுக்கிரகம் செய்த கும்பேசுவரருக்கு (சிவன்) மாசி மாதத்தில் உற்சவம் நடத்தி; மகாமகத்தன்று இக்குளத்தில் தீர்த்தமாட்டிவித்து, தாமும் உலகத்தோரும் உய்ய வழிகாட்டினார். பிரமனின் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்ட சிவன், மகாமகத்தன்று இத்திருக்குளத்தில் நீராடுவோர் எல்லாப் பாவங்களும் நீங்கி முத்திபெறுவர் என்று அருள் பாலித்தார். இதுவே அந்த வரலாறு. 'ஆர்தபிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்' என்பது மணிவாசகர் வாக்கு.

மகநட்சத்திரம் என்பது ஐந்து பிரகாசமான நட்சத்திரப் புள்ளிகள் உண்டு. இது இரவு நேரங்களில் விண்வெளியில் அரிஅருவாள் அல்லது பல்லக்குப் போலக் காட்சி தரும். அரிஅருவாள் வடிவக் கைப்பிடியில் ஒரு பேரொளிப் புள்ளி உண்டு அதற்கு ரெகுலஸ் (Leo) என்று பெயர் இதனை அடையாளமாக வைத்து இதனைக் கண்டு கொள்ளலாம் கிரகங்கள் நட்சத்திரங்கள் ஆகியவற்றின் காலங்களில் அவற்றை வணங்குவதும் பூசிப்பதும் நன்மை தருமென ஆன்றோர் அனுபவத்தால் தெளிந்தனர்.

''அவை நல்லநல்ல அடியாரவற்கு மிகவே''

— நா. க. சண்முகநாதபிள்ளை

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள
உதவி ஆணையாளர்

**திரு. க. சுந்தரேசன்**

அவர்களின் அன்பு மாமனார்

## கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

அவர்களின் மறைவால் ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரும்பாக உத்தியோகத்தர்,
கமநல சேவைக்குழு,
விவசாய சம்மேளனங்கள்.

கமநலகேந்திர நிலையம்,
புங்குடுதீவு. (85160)

# மரண அறிவித்தல்

## கோபாலபிள்ளை தினகராஜ்

கோபாலபிள்ளை தினகராஜ் அகாலமரணமானார்

அன்னார் எழுதுமட்டுவாழை வதிவிடமாகவும் துன்னாலை கிளானை வசிப்பிடமாகவும் கோபாலபிள்ளை - நேசம் தம்பதிகளின் புத்திரனும் கோகுலதாஸ் (காந்தன்—லண்டன்), சுஜாதா, சிறிதா, சுனிதா ஆகியோரின் அன்புச்சகோதரனும் மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9-3-2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் துன்னாலையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் யாபேரும் ஏற்றுக்கொள்ளுமாறுகேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
தா. கோபாலபிள்ளை

கிளான்
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (சி/15626)

# மெய் வன்மை போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 9

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் த. தவேந்திரராசா தலைமையில் தீருவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க. அருண்குமாரும் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையின் பிரதே முகாமையாளர் ரி. ரி. ஜெகநாதன், மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் செ. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்வர். (க—10)

★ ★ ★

சுழிபுரம், மார்ச் 9

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அதிபர் ந. பாலச்சந்திரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ந. சுந்தரசிவமும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய தொழில் நுட்ப உத்தியோகத்தர் பா. தியோஜினைஸ் வலிகாமம் கல்வி வலய உத்தியோகத்தர் வே. தினேஸ்குமார் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ 27-10)

# தம் தலைவிதியை……

(3ஆம் பக்கத் தொடர்)

மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு உடனடியாக தனது பேரினவாதச் சித்தாந்தத்தைக் கைவிட்டு, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து—

எமது தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை இனியும் காலந்தாழ்த்தாது அங்கீகரித்து, எமது தமிழ் பேசும் மக்களை இன அழிவிலிருந்து மீட்டு, சுபீட்சமான எதிர்காலம் கொண்ட இனமாக எழுந்து நிற்க தங்கள் அரசு இலங்கை அரசின் மீது பாரிய அழுத்தங்களை பிரயோகிக்கும் படியும்—

தமிழ் மக்கள் மீது பாரிய இராணுவ அடக்கு முறைக் கொடுமைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல்கொடுக்கும் படியும் மிகவும் தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றோம்.

தமிழர்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே.

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-6-5)

# வாழ்த்துகின்றோம்

நாளை பொன் விழாக் காணும்

**உயர் திரு. க. தேவராஜா**

(தலைவர், வணிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

அவர்களை பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி வணங்குகின்றேன்.

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

வ. நந்தீஸ்வரன்
(ஆசிரியர்)

(சி/15620)

# கண்ணீர் அஞ்சலி

அமரர் **செல்லத்துரை சிதம்பரப்பிள்ளை**

(சீனியண்ணை, சின்னத்தான்)

[ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத்திணைக்கள உத்தியோகத்தர்]

கலட்டிவீதி, வட்டுக்கோட்டை மேற்கு வட்டுக்கோட்டை

அவர்கள் 8-3-2001 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காலகண்டர் ஆலய தொண்டர்கள்.

மல்லாகம். [85169]

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி கௌரிபாலா

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கௌரிபாலா ஜேர்மனியில் 2-3-2001 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-நல்லம்மா தம்பதிகளின் புதல்வனும் தியாகராஜா - பாக்கியத்தின் மருமகனும் சாந்தலக்சுமி (மாலா)யின் அன்புக் கணவரும் ஆஷ், அபிரா, நீரா ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரிராஜா, தர்மலிங்கம் (சவூதி அரேபியா), ஜெயக்குமார் (வவுனியா) ஆகியோரின் சகோதரனும் கேசவலக்சுமி, மஞ்சுளா (வவுனியா), தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), தனபாலசிங்கம் (டென்மார்க்), தர்மராஜசிங்கம் (பிரான்ஸ்), தனலக்சுமி, பாக்கியலக்சுமி (ஜேர்மனி), வசந்தலக்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் பாலகிருஷ்ணன், கலாதேவி (ஜேர்மனி), ராஜாம்பாள் (டென்மார்க்), கேமலதா (பிரான்ஸ்), நவரட்ணம் (ஜேர்மனி), சிவபாதசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆரணி, அபிலாஷ், அனோஜன், சுதாகரன் (சுவிஸ்), சுமதி (ஜேர்மனி), சுயந்தன் (கனடா), சுகி (சுவிஸ்), அனுஜா (ஜேர்மனி), சகிஜா (ஜேர்மனி) ஆகியோரின் சித்தப்பாவும் ஜனார்த்தனன் (வவுனியா), டனுக்சன் (வவுனியா), அபர்னா (பிரான்ஸ்), சஙயா (பிரான்ஸ்), சபேசா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் லபிரன் (ஜேர்மனி), லகீஷ் (ஜேர்மனி), லக்ஷா (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (ஜேர்மனி), பிரபா (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமாவும் கஜானா, கஜானன் (ஜேர்மனி), தீபிகா, அக்ஷா (சுவிஸ்), ரஜீதரன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் சனிக்கிழமை 10-03-2001 நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
தியாகராஜா [மாமா]
கௌரிராஜா [அண்ணா]

நிரந்தர முகவரி:-
மலர்மகள் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:-
காலையடி, பண்டத்தரிப்பு. (சி/15622)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

கரவெட்டி

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளரினால் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப்பத்திரங்கள் 14 - 03 - 2001 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரத்தில் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 15 - 03 - 2001 முற்பகல் 11-00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
4. கேள்விகள் 15- 03 - 2001 நண்பகல் 12-00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
5. கேள்விகளை ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
6. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொடர் இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | நெல்லியடி பொதுச் சந்தை தற்காலிகச் சட்டடம் அமைத்தல் | 1000/- | 250/- |
| 02. | தலைமை அலுவலகக் காணி சுற்று மதில் அமைத்தல் | 1000/- | 250/- |
| 03. | உடுப்பிட்டிச் சந்தைக் கடைகள் அமைத்தல் | 1000/- | 250/- |
| 04. | துன்னாலை வடக்குச் சந்தைக் கட்டடத் திருத்தம் | 250/- | 150/- |
| 05. | வேதாரணியேஸ்வரா ச. ச. நிலையத்தில் குழாய்க்கிணறு அமைத்தல் | 100/- | 200/- |

வ. நடராசா ஜே. பி.
தவிசாளர்,

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
01. 03. 2001 (சி/15614)

## B. A (Part) - I

(யாழ்., பேராதனை)

| | | |
|---|---|---|
| தமிழ் | — | பி ப ஆசிரியர் |
| இந்து நாகரிகம் | — | திரு. M R |
| கிறிஸ்தவம் | — | கனிந்தா |
| மெய்யியல் | — | S. S. மனோகரன் |
| அரசியல் | — | திரு. கேதீஸ்வரன் |
| புவியியல் | — | திரு. ஞானேஸ்வரன் |
| நா. அரங்கியலும் | — | திரு. ஸ்ரீநந்தவேள் |
| ஆங்கிலம் | — | திரு சுப்பிரமணியம் |

ஆரம்பம்: நாளை [10-03 2001]
சனி 9 மணி

**BEACON - யாழ்நகர்**

(85735)


# கருத்தரங்கு

அகவொளி நிலையத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு யாழ். பாங்சல் வீதியில் உள்ள குடும்பவளத்துணை நிலையத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் அகவொளி நிலையத்தின் இயக்குநர் சே. யே. இராஜநாயகம், உளவியலாளர் கே. நந்தகுமார் ஆகியோர் 'தற்கொலை முயற்சி' எனும் கருப்பொருளில் கருத்துரையாற்றவுள்ளனர். (ச-10)

# பொருள்களை சரிபார்க்க அறிவுறுத்து

பாவனையாளர்கள் சங்கக் கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது பொருள்களின் நிறை, அளவு தரம் போன்றவற்றை உறுதிப்படுத்திச் சரிபார்த்துப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல் விளம்பரங்கள் சங்கத்தின் சகல கிளைகளிலும் பாவனையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பெப்ரவரி மாதத்திற்கான நிவாரணப் பொருள் விநியோகம் ஆரம்பமாக இருப்பதை அடுத்தே இந்த அறிவுறுத்தல் விளம்பரங்கள் சகல கிளைகளிலும் வைக்கப்பட்டிருப்பதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ 17)

# தேங்காய்களும் அபகரிப்பு

ஆள்கள் இல்லாத வேளையில் வீட்டுக் குசினிக் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான மூக்குக் கண்ணாடி, உடுப்புகள், வீட்டுக்குள் காணப்பட்ட 25 தேங்காய்கள் உட்படப்பல பொருள்களைப் பட்டப்பகலில் திருடிச் சென்றுள்ளனர்.

புலோப்பளை மேற்கிலிருந்து இடம்பெயர்ந்து துன்னாலை மேற்கில் தங்கியிருக்கும் மு. கந்தசாமி என்பவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உறவினர் வீட்டில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற வேளையில் இத்திருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டுத் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-117)

# விதை நெல் பெறுவதற்குப் பதிவு செய்க!

இவ்வருட பெரும்போக நெற்செய்கைக்குரிய விதை நெல் தேவையான விவசாயிகள் தமது விவசாய சம்மேளனங்கள் ஊடாக கமநல கேந்திர நிலையங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

ஒரு புசல் விதை நெல்லுக்கு 200 ரூபா வீதம் செலுத்தி இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் விவசாயிகள் தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாண மண்ணில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய சிவப்பு இன நெல்லான ஏரி 402—405, பி.ஜீ—355 இன நெல் விதைகள் வெளி மாவட்டங்களில் இருந்து கமநல சேவைகள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவுள்ளன.

கடந்த வருட நெற்செய்கையில் ஏற்பட்ட பாதிப்பினால் இந்த வருடச் செய்கைக்குத் தேவையான விதை நெல்லுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு நிலவுவது தெரிந்ததே. (க-5)

## இதய அஞ்சலி

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. க. சுந்தரேசன் அவர்களின் அன்பு மாமனார்

## கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமநலகேந்திர குழு உறுப்பினர்கள்,
நிலைய உத்தியோகத்தர்கள்,
கமநல கேந்திர நிலையம்,
நல்லூர்.

(85091)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர்
திரு. க. சுந்தரேசன் அவர்களின் அன்பு மாமனார்

## க. வேலாயுதபிள்ளை

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கமநல சேவைக்குழு,
கமநல கேந்திர நிலைய
உத்தியோகத்தர்கள்.

கமநல கேந்திர நிலையம்,
உடுவில்.

(85086)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்
திருமதி மங்கையர்க்கரசி விக்கினேஸ்வரன் அவர்களின் கணவர்

## என். விக்கினேஸ்வரன்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் மனைவி, மகன் மற்றும் உறவினர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். போதனா வைத்தியசாலை,
தாதிய உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.

(85140)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளரான
திரு. க. சுந்தரேசன் அவர்களின் பாசமிகு மாமனார்

## கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் உறவினர்களுடன் இணைந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவர்களின் துக்கத்திலும் பங்குகொள்கின்றோம்.

பெரும்பாக உத்தியோகத்தர்,
கமநல சேவைக்குழு,
கமநல கேந்திர நிலைய
உத்தியோகத்தர்கள்.

கமநலகேந்திர நிலையம்,
கைதடி, சாவகச்சேரி.

(85137)


## JAFFNA Y.M.C.A.

அங்கத்தவருக்கான உள்ளரங்க

## விளையாட்டுப் போட்டிகள்

♣ Badminton ♣ Carraom
♣ Chess ♣ Table Tennis

விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். போட்டிகளுக்கான
விண்ணப்ப முடிவு திகதி:- 30-03-2001.

செயலாளர், YMCA.
யாழ்ப்பாணம்.

109, கண்டி வீதி, கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(81518)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. ச. சர்வேஸ்வரன்


[அதிபர், யா/ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்]

எமது பாடசாலை அதிபரான திரு. ச. சர்வேஸ்வரன் அவர்கள் தரம் 2:1 க்கு பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டி, கல்வியுலகில் கலங்கரை விளக்காய் காலமெல்லாம் சேவையாற்றும் கனிந்த மனம் படைத்த ஈஸ்வரனை காலமெல்லாம் வாழ வாழ்த்துகின்றோம்.

— பாடசாலைச் சமூகம்

(85138)

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் தாமோதரம்பிள்ளை ஜெகநாதன்

[இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி,
(Retired Police Inspector)
கணக்காளர், நந்தினி நகைமாடம், யாழ்ப்பாணம்]

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30-12-1941 | 06-02-2001 |

அன்பின் திருவுருவே! எங்கள்
ஆருயிர்த் தெய்வமே!
கண்ணின் மணியாய் எமைக்
காலமெல்லாம் காத்திருந்தீர் — உமை
எண்ணிக் கலங்குகின்றோம்!
எப்படித்தான் மறந்திருப்போம் — இம்
மண்ணில் உம்மைப் போல் நல்ல
மாண்புடையார் யாரப்பா!

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தும் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (09 - 03 - 2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பூஜையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: இதனை தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, சகோதரர்,
பிள்ளைகள், மருமக்கள்.

3 ஆம், கட்டையடி,
கல்வியங்காடு.

(85126)

# யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 07 — 04 — 2001 சனிக்கிழமை கல்லூரியின் தம்பர் நினைவு மண்டபத்தில் காலை 10-30 மணிக்கு சங்கத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் என்பதை சகல பழைய மாணவர்களுக்கும் அறியத் தருவதுடன் பின்வரும் விடயங்களையும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

1. பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 30 - 03 - 2001 இற்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.
2. புதிய அங்கத்தவர்களாக சேரவிரும்புவோர் 30 - 03 - 2001 ற்கு முன்செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.
3. மதிய போசனத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் செயலாளரிடம் 100 ரூபாவைச் செலுத்தி பதிவு செய்துகொள்ளவும்.
4. தனித்தனி அறிவித்தல் அனுப்பப்படமாட்டாது.

ச. பிரேம்குமார்
செயலாளர்

71/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (கி-15607)

ஆவரங்கால் மத்திய முன்பள்ளி வளர்ச்சி நிதிக்கான
## கலைக் கதம்ப விழா

இடம்: ஆவரங்கால் மத்திய முன்பள்ளிக் கலையரங்கு
காலம்: இன்று [09-03-2001] வெள்ளிக்கிழமை இரவு 8 மணி

அ) ''ராகம்ஸ்'' இசைக்குழுவினரின் ''இன்னிசை மழை''
ஆ) கலைமகள் மன்றத்தாரின் ''சமூகம் என்ன நீதிமன்றமா?'' (சமூக சீர்திருத்த நகைச்சுவை நாடகம்)
இ) தென்மராட்சி 'லோகன்ஸ்' குழுவினரின் ''பிறேக் டான்ஸ்''
ஈ) மத்திய முன்பள்ளிச் சிறார்களின் ''இசையும், அசைவும்''

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

ம. மு. நிலையம் — அன்பளிப்பு: 100/- 50/- 20/-

விளம்பர அன்பளிப்பு:
ஆவரங்கால் புத்தூர் வீதி,
நியூநிலரா தொலைத் தொடர்பகம்
NO. 070 - 212916

மேலதிக சட்டணமின்றி வீடுகளிலிருந்தே தொலைத் தொடர்பு கொள்ளக் கூடிய PHONE வசதி போட்டோ பிரதி, பக்ஸ் சேவை NO. 070 - 212916

லெமனேற்றிங் சேவை:
(அடையாள அட்டை, புகைப்படங்கள், பத்திரங்கள் கவரிடுதல்) (85025)

## நன்றியும் பாராட்டும்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அமைப்பாளர்களுக்கான போட்டியில் எம்மை வடபிராந்தியத்தில் முதலிடம் பெறுவதற்கு உறுதுணையாக இருந்து செயற்பட்ட எனது 20 (இருபது) முகவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் எனது முகவர்களான

### திரு. K. கணபதிப்பிள்ளை

(8623) நியமனம் 1/1/62. (வல்லிபுரம், புலோலி) 38 வருட காப்புறுதிச் சேவையை பூர்த்தி செய்தமைக்காகவும்

### திரு A. D. பொஸ்கோ

(58023) நியமனம் 29/5/64 (சில்லாலை, பண்டத்தரிப்பு) 36 வருட காப்புறுதிச் சேவையைப் பூர்த்தி செய்தமைக்காகவும்

### திரு. V. நந்தகுமார்

(343123) 1999 ஆம் ஆண்டு (நவாலி வடக்கு, மானிப்பாய்) வட பிராந்தியத்தில் காப்புறுதி முகவர்களுக்கான போட்டியில் இரண்டாம் இடம் பெற்றமைக்காகவும் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களுக்கு எங்கும் அருள் சுரக்கும் எழிலாள் நயினை நாகம்மையின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

லயன் சி. ந. கதிர்வேலு J.P.
அமைப்பாளர் (642) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.

''நயினைக் கதிர்''
''தேனாவளவு''
கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (85075)


## 10 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 9

நீர்வேலி மற்றும் கோப்பாய்ப் பகுதிகளில் அண்மைக் காலத்தில் இரவு வேளைகளில் இடம்பெற்ற பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் 10பேரை பொலீஸார் கைது செய்து விசாரணைக் குட்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்க நகைகள், சைக்கிள்கள் வீட்டுத் தளபாடங்கள், கூரை ஓடுகள் போன்ற பல பொருள்கள் நீர்வேலிப் பகுதியில் திருடப்பட்டுள்ளன.

திருடப்பட்ட ஓடுகளை விற்க முற்பட்ட சமயம் இவர்கள் 10 பேரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-15)

## குடும்பஸ்தர் கொலை; சந்தேக நபர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 9

நாயன்மார்கட்டுப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை குடும்பஸ்தர் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்ததாகக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை திருமகள் வீதியைச் சேர்ந்த குமார் பூபாலசிங்கம் (வயது 68) என்பவரே இக்கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு யாழ். பொலீஸ் நிலையத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஜ 5-6)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 9

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அருணோதயக் கல்லூரி மண்டபத்தில் செ. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு, சைவப் புலவர் சு. செல்லத்துரை, அருணோதயக் கல்லூரி அதிபர் கி. மகேந்திரராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். [ம-10]

## உடுப்பிட்டியில் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 9

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவின் உடையமைத்தல் தொழிற்திறன் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் திருமதி இ. குட்டித்தம்பி தலைமையில் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் இ. சிவராசாவும், சிறப்பு விருந்தினராக முறைசாராக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமாரும் கலந்து கொள்வர். (க-10)


## ரெயிலர், கட்டர் தேவை

சிறுவர், பெண்களுக்கான ஆடைகள் தைப்பதிலும், கட்டிங் (Cutting) செய்வதிலும் அனுபவம் உள்ள பெண்கள் உடனடியாகத் தேவை.

மொடேர்ன் றெடிமேட் சோ றூம்.
இல. 3, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(85117)

## வெளிநாட்டு உயர் கல்வி வாய்ப்புடன்
1000 மாணவர்களுக்கு 100 வீதம்
## புலமைப்பரிசில்

எமது நிறுவனம் புலமைப்பரிசில் ஊடாக குறைந்த செலவில் நவீன கணனிக் கல்வியை வழங்குவதுடன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களில் எமது மாணவர்களுக்கு உயர் கல்வியையும் பெற்றுக் கொடுக்கின்றது.

விண்ணப்ப முடிவு திகதி: 25 - 03 - 2001

UNIVAC COLLEGE of COMPUTER INFORMATION TECHNOLOGY
(British ACP Recognized Computer Training Centre)

| | | |
|---|---|---|
| Pointpedro Road, Atchuvely | K. K. S Road Narchimar Kovil, | Black Road, Chankanai. |

Jaffna.

(85128)


# நல்லூர் பிரதேச சபை
## அறிவித்தல்

### 01. வீதிகளுக்குப் பெயர் சூட்டல்:-

எனது 26 - 01 - 2001ஆந் திகதிய உதயன், வலம்புரி பத்திரிகை விளம்பரப்படி எமது பிரதேச சபை எல்லைக்குள் அமைந்த வீதிகளுக்குப் பெயர் சூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை இது சம்பந்தமாகக் கிடைக்கப்பெற்ற ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டு சபை ஆதனவரிப் பதிவேட்டின் படியும், கிடைக்கப்பெற்ற ஆலோசனைகளின் படியும் பெயர் சூட்டும் நடவடிக்கை இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றேன். எனவே மேற்படி நடவடிக்கை 30 - 03 - 2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதற்குள் மேற்படி விடயம் சம்பந்தமான விவரங்களைத் தெரிவிக்க விரும்புவோர் மேற்படி திகதிக்கு முன்பாக அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கப் பெறும் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

### 02. படவரைஞராகப் பதிவு செய்தல்:-

இதுவரை சபையுடன் படவரைஞராகப் பதிவு செய்யத்தவறியோர் மார்ச் 31ஆந் திகதிக்குள் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும்.

### 03. வியாபார உரிம அனுமதிப்பத்திரம்:-

இதுவரை இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம், தொழில் செய்வோர் இதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறத்தவறியிருப்பின் மார்ச் 31 ஆம் திகதிக்குள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தவறும் பட்சத்தில் உள்ளூராட்சி மன்றக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

### 04. ஆதனவரி - 2001:-

2001 ஆம் ஆண்டு ஆதனவரி முதலாம் கந்தாயத்தைச் செலுத்தியவர்கள் 30-04-2001, 31-07-2001, 31-10-2001 ஆகிய திகதிகளுக்கு முன் முறையே 2 ஆம், 3ஆம், 4 ஆம் கந்தாயங்களின் ஆதனவரியைச் செலுத்தும் பட்சத்தில் 5% கழிவு வழங்கப்படும்.

அந்தந்தக் கந்தாயத்தின் முடிவிற்குள் ஆதனவரியைச் செலுத்தத்தவறின் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக்காணிகளுக்கும் 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன்.

''சபைக்குச் சேரவேண்டிய வரி நிலுவைகளை விரைவாகச் செலுத்தி பிரதேச துரித அபிவிருத்திக்கு உதவுங்கள்''.

### 05 தொழிலாளர்கள் பதவி (ஒப்பந்த அடிப்படை)

இச் சபையின் விசேட வேலைத் திட்டங்களின் போது பொதுத் தொழிலாளர்களாகக் கடமையாற்றுவதற்கு 18வயதிற்குக் குறையாமலும் 45வயதிற்கு மேற்படாமலும் உள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து 12.03.2001 ஆம் திகதிக்குள் ''தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படின் தலைமைக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### 06. வெற்றுப் போத்தல் விற்பனை:-

கீழ் குறிப்பிட்ட வகையான வெற்றுப் போத்தல்கள் விற்பனை செய்யப்பட உள்ளன. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

1) 750 மி. லீ. — முழுப் போத்தல்
2) 725 மி. லீ. — கோடியல் போத்தல்
3) 450 மி. லீ. — சிறிய போத்தல்

(க. மணிபல்லவராஜன்
(ஜே. பி. யூ எம்),
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
05.03.2001.

(சி/15496)

## பட்டப்பின் டிப்ளோமா மாணவர்களின் 'ஆசிரியம்' சஞ்சிகை வெளியீட்டு விழா

இடம் : யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
காலம் : 11-03-2001 ஞாயிறு காலை 9.30 மணி
தலைவர் : திரு.செ.பாலச்சந்திரன்
*சிறப்பியலவர்* : திரு.வி.இராசையா
(வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர்)
*நூல் வெளியீட்டுரை* : திரு.கு.சண்முகராஜா
(சிரேஷ்ட விரிவுரையாளர்)
*நூல் மதிப்பீட்டுரை* : திருமதி கோகிலா மகேந்திரன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயம்)
*முதற்பிரதி பெறுபவர்* : சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.கு.சண்முகநாதன

*சிறப்புப் பிரதிகள் பெறுபவர்கள்:*

- செல்வி யோ.கந்தையா (விரிவுரையாளர்)
- திரு.K.சண்முகானந்தன் (விரிவுரையாளர்)
- திரு.S.செந்தில்மணி (விரிவுரையாளர்)
- திரு.S.பரம்சோதி (விரிவுரையாளர்)
- திரு.வே.தம்பாப்பிள்ளை (உப அதிபர் மானி. இந்துக் கல்லூரி)
- திரு.பா.தனபாலன் (விரிவுரையாளர்)
- திரு.A.C.ஜோர்ஜ் B.A. (வலயம் I)
- கலாநிதி நா.கமலநாதன் (பீடாதிபதி கல்வியியற் கல்லூரி)
- செல்வி S.சுகந்தினி
- திருமதி செல்லையா (ஆசிரியர்)
- திரு.S.மகாதேவன் (முதலாம் வருட மாணவன்)
- திருமதி விஸ்வநாதன் (விரிவுரையாளர்)
- திரு.சுபாகரன் (ஆசிரியர்)
- திரு.பிரான்சிஸ் (ஆசிரியம் முதல் வெளியீட்டு ஆசிரியர்)
- செஞ்சொற்செல்வன் ஆறு.திருமுருகன் (B.A.)

பதிலுரை : கலாநிதி தா.அமிர்தலிங்கம்

~ கலைநிகழ்வுகள் ~

நன்றியுரை : திரு.க.உதயரூபன்

திரு.செ.பாலச்சந்திரன்
தலைவர் (85168)

கணேஸ், உதயரூபன்
பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
மாணவர் மன்றச் செயலாளர்.

## வாழ்த்துகின்றோம்



### திருமிகு க.தேவராஜா
(தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**பொன்விழாக் காணும் அறிஞனே!**
**இப்புவி சிறக்க இனிதே வாழி பல்லாண்டு!!**

கலை, வர்த்தக மாணவர் மன்றம்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.
(C/15619)


## சுனில் ஆட்ஸ்

01-03-2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**Pentium 111 ற்கான Scanners**
**Creative, Yamaha CD Writers**
**T.V. Cards**
**Sony CD Roms**
**Dust Covers, Computer Cleaner Tin Spreyers** (England)
**Head Phone With Mic**
**Blank C.D.S, Wr.C.D**

Note: 1. எம்மிடம் M.P.3 தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, புதிய பாடல் CD க்கள் விற்பனைக்கு உண்டு)
2. புதிய பழைய பாடல்கள CD இல் இருந்து CD க்கு பதிவு செய்து தரப்படும். ஓடியோ கசட்டில் இருந்தும் CD பதிவு செய்து தரப்படும்.

**சுனில் ஆட்ஸ்**

(C/15615) **277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்

### தொமிங்குமுத்து கபிரியேல்

(இளைப்பாறிய அதிபர்)

சாவகச்சேரி, கச்சாய் வீதியை வதிவிடமாகக் கொண்ட தொ.கபிரியேல் 28.02.2001 புதன் அக்கராயனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேணடேற்றின் அன்புக் கணவரும், பீற்றர்(விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு), அமலதாசன்(RESC- வேம்படி மகளிர் கல்லூரி), கீதபொன்கலன்(யாழ்.பல்கலைக்கழகம்), டோமினிக்(சவூதிஅரேபியா), மேரிராணி, மேரிமாகிறேற், சாள்ஸ்(சர்வோதயம்-மொரட்டுவ) ஆகியோரின் அன்புத் தந்தையும் தஸ்நேவிஸ்(சென் ஆன்ஸ் வித்தியாலயம், கொழும்பு), கயசிந்தா, இராசகுமாரி, S.V.E. ஜெயக்குமார்(Lanka Cement-K.K.S) , அன்ரனிநாதன்(Paranthan Chemicals) ஆகியோரின் அன்பு மாமனாரும், யூடா சுசந்தி, யூடா மரினி, தயாளினி, யூடா ஜயந்தா(Holy Family Convent மாணவிகள்), றோயல் சர்வாநந்தா, நித்தியானந்தா(St.Patricks College மாணவர்கள்), பிரியா, அருண், ஞானா, சந்து, யோண், ஜோயல், ஜோயலி, ஜீவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் அக்கராயனில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 24, கண்டி வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* (85167)

தகவல்:
க.கமலதாசன் (மகன்)

## நகரில் இளைஞனைக் காணோம்

யாழ்ப்பாணம், மார்ச்.9

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் முதல் காணாமற் போய்விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சரவணமுத்து இராசேஸ்வரன் (வயது 22) என்பவரே காணாமற் போனவராவார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு தமது வீட்டிலிருந்து புறப்பட்ட இவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

(ஐ-5-6-9)

## மாநகர சபை விசாரணைக் குழு திங்கள் கூடும்

யாழ்ப்பாணம், மார்ச்9

யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதி ஊழியர்கள் மேற்கொண்ட கறுப்புப்பட்டி போராட்டம் தொடர்பாக விசாரணை செய்வதற்கென நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை கூடவுள்ளது.

யாழ்.மாநகரசபையின் பிரதி மேயர் செல்லன் கந்தையன் தலைமையில் நடைபெறும் இந்த விசாரணைக் குழுவில் கூட்டத்தில் கறுப்புப் பட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்பாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5)

## மாலைநேர வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச்9

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வகுப்பில் சேர்வதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அனுமதிக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கடிதங்கள் கிடைக்காதவர்கள் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை -

இக்கல்லூரியில் நடைபெறும் ஏனைய வகுப்புக்களில் சேர்வதற்குத் தெரிவு செய்யப்பட்டு கடிதங்கள் கிடைக்காதவர்களும் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-5)


**இதோ!**

**யாழ்நகரின் மத்தியில் நகரின் முதன்நிலை மருத்துவர்களின் ஆலோசனையும் வைத்தியமும்.**

1) நரம்பியல் NEURO
2) மகப்பேறு V.O.G
3) அறுவைச் சிகிச்சை SURGERY
4) கண் EYE CLINIC
5 பொதுவைத்தியர் GENERAL
6) குழந்தைகள் PAEDIATRIC

பார்வையிடும் இடம்:
**வைஜி மெடிக்கல்ஸ்**
(வைத்தீஸ்வரன் மெடிக்கல்ஸ்)
462,ஆஸ்பத்திரி வீதி,
O.P.D முன்பாக,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
**மக்களின் நலன் கருதி உடனுக்குடன் குறிப்பிட்ட திகதிகளில் சேவைகளைப் பெறலாம்.**
(ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில்) (85163)


## இரங்கல் திருப்பலி

### அல்பிரட் பெனடிற் (யோகம்)

01.03.2001இல் சுவிற்சர்லாந்தில் காலமான அல்பிரட் பெனடிற் அவர்களின் நல்லடக்கம் நாளை (10.03.2001) சனிக்கிழமை சுவிற்சர்லாந்தில் நடைபெறுவதனால் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக அன்றைய தினம் (10.03.2001) பிற்பகல் 4.45 மணியளவில் யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெறவிருக்கும் இரங்கல் திருப்பலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
திருமதி பெனடிற் மேரியோசப்பின(மனைவி)
பெ.செல்வரஜித்,
பெ.சதீஸ்குமார்.
(பிள்ளைகள்)

*121,சென். பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (85166)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கண்மணி பெரியதம்பி (இணுவில்)

இணுவிலைச் சேர்ந்த கண்மணி பெரியதம்பி அவர்கள் 4.3.2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவநாதர் பெரியதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், திருமதி கலைமகள் நடராஜா, சிவகடாட்சம் (USA, இளைப்பாறிய படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம்), உலகேஸ்வரன்(இளைப்பாறிய பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், V.K. நடராஜா (இளைப்பாறிய உத்தியோகத்தர், துறைமுக அதிகாரசபை), புவிலக்சுமி, காலஞ்சென்ற கமலராணி (இளைப்பாறிய ஆசிரியை, இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், Dr .திருக்குமார்(U.K), திருமதி கோகிலகுமாரி ஸ்ரீதரன்(U.K), திருமதி உதயகுமாரி ஸ்ரீகுமார்(U.K),திருமதி சாந்தகுமாரி ஜனாத்தகுமார்(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), சிவகுமார்(கணக்காளர்,U.K), திருமதி ஷகிலா சுதாகர்(கனடா), திருமதி அகிலா பிரம்மா(U.K), அருணா, சுகந்தா(கொழும்புப் பல்கலைக்கழகம்), முரளிதரன்(U.K), திருமதி மீரா முகுந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆதவன், பௌர்ணமி, பானுஜா, சிந்து, சோபனா, பாரதி, யுதிஸ்ரன், தயாளி, கஜானன், அபிஷேகன், ஆரணன், சுசேன், ஹரிணி ஆகியோரின் அன்புப் பூட்டியும், திருமதி உலகாத்தைப்பிள்ளை பொன்னுத்துரை, காலஞ்சென்றவர்களான திருமதி ந.மாணிக்கம், சங்கரப்பிள்ளை தம்பிஜயா(மலாயன் பென்சனியர்), திருமதி சி.பூரணம், திருமதி இ.தங்கம்மா, திருமதி செ.புவிநாயகம், (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை (10.03.2001) சனிக்கிழமை காலை 10 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (11.03.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று 10 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*23/2 டி அல்விஸ் பிளேஸ்,*
*கல்கிசை.*

*"குமரபதி"*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (85153)

தகவல்:
V.K. நடராஜா (மருமகன்)
T.P. - 074.203396
P.சிவகடாட்சம் (மகன்)
T.P. - 074.512349
P.உலகேஸ்வரன் (மகன்)
T.P. 624437

### நமசிவாயம் சுப்பிரமணியம்

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் தாவடியை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் சுப்பிரமணியம் நேற்று (08-03-2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும் பத்மரஞ்சினி, பத்மகாந்தன், பத்மசீலன், பத்மசிறீ, பத்மமுரளிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரா, திருசாந்தினி, வாணி, அனுசா, இந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆருசன், இமாஜினி, பவாஜினி,ஜெகப்பிரகாஸ், கஜப்பிரகாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10-03-2001) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி*
*அருகில்,*
*தாவடி.* (85174)

தகவல்:
பத்மகாந்தன் (மகன்),
மகேந்திரா (மருமகன்)

### திருமதி அண்ணாமலை சரஸ்வதி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வேதவுடையார் வளவு, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அண்ணாமலை சரஸ்வதி 07-03-2001இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாமலையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தரட்ணம் - சின்னத்தங்கத்தின் மூத்த புதல்வியும் வைத்திலிங்கம் - தங்கமுத்துவின் அன்பு மருமகளும், தனலட்சுமி(கொழும்பு), பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம் நாகேஸ்வரி மற்றும் பவளராணி(கொழும்பு), பாலசுப்பிரமணியம் (இ.மி.ச.யாழ்ப்பாணம்), தனபாலசிங்கம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானம்(ஓய்வுபெற்ற தபாலதிபர், கொழும்பு), சிவஞானசுந்தரம்(லங்கா சிமெந்து லிமிட்டெட் K.K.S), சின்னத்துரை (சிமெந்துக் கூட்டுத்தாபனம், K.K.S), தவராசா (கொழும்பு), திருமதி சிவகாம்பிகை பாலசுப்பிரமணியம்(ஆசிரியை, அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி), திருமதி மிராளினி தனபாலசிங்கம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சோதிபதியம்மா மற்றும் காந்திமதி(லண்டன்), காலஞ்சென்றவர்களான நடராசா, நாரயணபிள்ளை மற்றும் வன்னியசிங்கம்(கொழும்பு), காராளசிங்கம், காலஞ்சென்ற விஜயராமன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, செல்லத்துரை மற்றும் அன்னம்மா, தவமலர், பூங்கோதை, காலஞ்சென்ற நித்தியலட்சுமி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, உருத்திராட்சம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி சிவகௌரி (லண்டன்), நடனகாந்தன்(லண்டன்),திருமதி அமிர்தலோஜினி(பிரான்ஸ்), திருமதி மாலதி(நோர்வே), மைதிலி, தயாபரன்(பல்கலைக்கழகம், கண்டி), குணாளன், விஜிதா, தனுஜா, ஆரணி, ராகவி (பிரான்ஸ்), துவாரகி, விஷ்ணுப்பிரியன், பாலகோபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜனனி, ஜனார்த்தனன், விபூஷணன்(லண்டன்), தரணி, சுஜனி, உஷானி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-03-2001) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்:-
அ.பாலசுப்பிரமணியம்(பாலா),
அ.தனபாலசிங்கம்(தவம்)
(மகன்மார்)

*வேதவுடையார் வளவு,*
*மல்லாகம்.* (85170)

# கிராம அலுவலர் உட்பட மூவர் படையினரால் கைது

யாழ்ப்பாணம்,மார்ச்9

கிராம அலுவலர் உட்பட மூவர் படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பி.ஏ.தம்பிலேனைச சேர்ந்த கிராம அலுவலரான நாக லிங்கம் சுந்தரராஜன் (வயது 44) என்பவர் நேற்றுக் காலை 8 மணிக்கு வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார்.

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் தாசன்(வயது 17) என்பவர் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு வீட்டில் வைத்து 513 ஆவது படையணி படையினராலும் -

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவேகானந்தன் ரமேஸ் (வயது 32) என்பவர் வீட்டில் வைத்து நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு 513 ஆவது படையணி படையினராலும்கைது செய்யப்பட்டதாக அந்த முறைப் பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10-9-6-ரி)

# நாயன்மார்கட்டு கொலை; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்9

நாயன்மார்கட்டுப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை தடுப்புக்காவலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட அரியாலை திருமகள் வீதியைச் சேர்ந்த குமார் பூபாலசிங்கம் என்பவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆயர் செய்யப்பட்டபோது நீதிவான் இந்தத் தடுப்புக் காவல் உத்தரவைப் பிறப்பித்தார்.

(முன்னர் வந்த செய்தி 12ஆம் பக்கத்தில்) (ஐ-5-6)

## பயணிகள் பட்டியல் பார்வைக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ்.மாவட்டத்திற்கு வெளியில் செல்வதற்காக கோப்பாய் பிரதேச செயலக பிரிவிலிருந்து விண்ணப்பித்தவர்களில் பாதுகாப்பு அனுமதி கிடைத்துள்ளவர்களின் பெயர்ப்பட்டியலை கோப்பாய் பிரதேச செயலக பணிமனையில் நேரில்வந்து பார்வையிடலாம் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ)

## அறிவியல் அரங்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ். மாட்டின் வீதியில் அமைந்துள்ள நியூ பிறைற் கல்வி நிறுவனத்தினரால் மாதாந்தம் நடத்தப்படும் அறிவியல் அரங்கம் நிகழ்வு நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பொது விடயம் தொடர்பான நிகழ்வும் மாணவர்களுக்கான வினாடிவினாப் போட்டியும் இடம்பெறவுள்ளன. (ஐ)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்துவது தெரியவந்துள்ளது. இவை சீனத் தயாரிப்பான 63 - 107 மில்லி மீற்றர் லோஞ்சர்கள் மூலமே ஏவப்படக்கூடியவை என நம்பப்படுகிறது. சீனா தனிநபர் ஒருவர் ஏந்திச் செல்லக்கூடிய ஒரு குழல் லோஞ்சர்களையே தயாரிப்பதுண்டு வடகொரியாவே இரட்டைக் குழல் லோஞ்சர்களைத் தயாரிக்கிறது. இது மிகவும் அரிதான ஆயுதமாகும். இந்த லோஞ்சர் 18 கிலோகிராம் எடையுள்ளது. 8 கிலோ மீற்றர் தூரத்தைப் பாய்ந்து செல்லக்" கூடியது -என்று 'ஜேன்ஸ் இன் ரலியன்ஸ் றிவியு' தெரிவித்துள்ளது: (ஐ)

## ஆசிரியர் சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்9

எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவமும் சங்கத்தின் கல்வி, கலாசாரச் செயலாளர் செபாலசிங்கமும் அதிபர், ஆசிரியர்களுடன் அவர்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாட விருக்கின்றனர்.

யாழ். வலயத்தைச் சேர்ந்தவர்கள் இன்று பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையும் -

வடமராட்சி, தீவக வலயங்களைச சேர்ந்தவர்கள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும் -

வலிகாமம், தென்மராட்சி வலயங்களைச் சேர்ந்தவர்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் ஒரு மணிவரையும் -

சங்க அலுவலகத்தில் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## வரணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய இருவரும் தோட்டத்துக்கு நீர் இறைத்துக்கொண்டிருந்த சமயம் கைதுசெய்யப்பட்டதாகவும் - தமக்குத் தெரியவந்ததாக உறவினர் கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இவர்களைக் கைது செய்யவில்லையென்று அப்பிரதேசப் படைமுகாமில் கூறப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தொடர்பான விவரங்களைப் பெறுவதற்காகப் பருத்தித்துறைப் பிரதேசசபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் பருத்தித்துறை அமைப்பாளருமான ஸ்ரீரங்கேஸ்வரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டுள்ளார். (ஐ-3-173)

## சாரணர்தின நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் ஆதரவில் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவிருந்த உலக சாரணர் தின நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கல்லூரியில் வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவிருப்பதாலும் தவிர்க்க முடியாத வேறு காரணங்களாலும் இந்த நிகழ்ச்சி ஒத்திவைக்கப்படுவதாகவும் -

நிகழ்ச்சி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும்- மாவட்ட சாரணர் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(ஐ)

## போரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு எந்தவித நிவாரணத்தையும் கொடுக்கவில்லை. எனினும் நாடு பெரும் பொருளாதார நெருக்கடி நிலையில் உள்ளது என்பதற்கு கட்டியம் கூறியுள்ளது.

இந்த நிலைக்கு முக்கிய காரணம் யுத்தம் தொடர்வதுதான் என்பது உணரப்பட்டுள்ளது. இந்த நிலையில் இருந்து நாடு விடுபடவேண்டுமாயின் யுத்தம் நிறுத்தப்பட்டு புலிகளுடன் அரசு பேசவேண்டியது அவசியமாகின்றது. அரசின் வருமானத்தில் 50 சதவீதம் பாதுகாப்பு வரி, ஜி.எஸ்.ரி. வரி ஆகியவற்றில் தங்கியுள்ளதை உணரமுடிகின்றது - என்றார்.

(ஐ-3)

இன்றைய புதிய வீடியோ CD வெளியீடுகள்

அர்ஜுன், மதுபாலா
✪ அர்ஜுனா
நாகர்ஜுன், சௌந்தர்யா
✪ குருஷேத்திரம்
சுரேஸ்கோபி
✪ கலர் ஸ்ரோரி
பிரதிகள் உடன் பெறலாம்
புதிய போஸ்ரர்கள் விற்பனைக்குண்டு
விஷ்ணு வீடியோ
K.K.S. Rd, கோண்டாவில்
(C/15624)

அர்ஜுன், மதுபாலா, சங்கவி நடித்த
அர்ஜுனா
நாகர்ஜுன், பிரகாஸ்ராஜ் ரகுவரன், சௌந்தர்யா நடித்த
குருஷேத்ரம்
வீடியோ ஆனந் ஸ்ருடியோ
யாழ்.வீதி, மானிப்பாய்
(C/15625)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு - என்று பிரதமர் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஐ.நா.சபையில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார். (ஐ-7)

## விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விடயத்தைப் பெரிதுபடுத்தக்கூடாது.

சமாதானப் பேச்சுக்களுக்குத் தற்சமயம் எடுக்கப்படும் முன்முயற்சிகளை இருதரப்பும் கைவிடக்கூடாது. அவற்றைக் குழப்ப முனையவும் கூடாது என்று பிரிட்டன் இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளதாகக் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசுப் பிரிதிநிதியைக் கொழும்பில் உள்ள தூதரகத்துக்கு அழைத்தும் -

விடுதலைப் புலிகளின் பிரதிநிதியை லண்டனில் உள்ள தமது அலுவலகத்துக்கு அழைத்தும் -

இந்தக் கோரிக்கையை பிரிட்டிஷ் அதிகாரிகள் விடுத்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை -

21 அமைப்புக்களைப் பயங்கரவாத அமைப்புக்களாகப் பிரகடனம் செய்யும் பட்டியல் இறுதியானது அல்ல என்றும் - பொலீஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் - அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் - இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் -

இந்தப் பட்டியலில் உள்ள ஓர் இயக்கத்தை நீக்கவோ அல்லது புதிதாக வேறு இயக்கத்தைச் சேர்க்கவோ முடியும் என்றும் - பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு அதிகாரியான சாள்ஸ் கிளாக் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 21 அமைப்புக்களையும் தடைசெய்யும் சட்டம் உடனடியாக அமுலுக்கு வரமாட்டா என்றும் -

இரு சபைகளிலும் விவாதிக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டு உள்துறை அமைச்சர் கையொப்பம் வைத்த பின்னரே அது அமுலுக்கு வரும் என்றும் - அந்தச் சட்டம் அமு லுக்கு வருவதற்கு நான்கு வாரத்தில் இருந்து ஆறு வாரங்கள்வரை செல்லலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் -அவர் மேலும் சொன்னார்.

## காலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் வன்முறையில் இறங்கியதாகக் கூறப்படுகிறது. மாணவரின் வன்செயல்கள் பரவி யதையடுத்து காலி நகரில் நேற்று மாலை ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அது இன்று காலை 5 மணிவரை அமுலில் இருக்கும் என்று பொலீஸார் அறிவித்துள்ளனர். வன்செயல்களில் ஈடுபட்டதா கக் கூறப்படும் 14 மாணவர்கள் நேற்றிரவு கைது செய்யப்பட்டதாகப் பிந்திய தகவல் தெரிவித்தது. (ஐ-7)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னத்தில் 4.4 சதவீதமாக இருக்கும்.

✪ சமூகநல மேம்பாட்டுச் செலவீனம் 2,111 கோடி 80 லட்சம் ரூபா.

✪ மொத்தச் செலவீனம் 41,716 கோடி 40 லட்சம் ரூபா.

✪ மொத்த வருமானம் 25,297 கோடி 90 லட்சம் ரூபா.

✪ துண்டுவிழும் தொகையான 16,418 கோடி 50 லட்சம் ரூபா வரி விதிப்பு, உள்நாட்டு, வெளிநாட்டுச் கடன்கள் ஆகியன மூலம் நிரப்பப்படும்.

✪ வெளிநாட்டு வேலைவாய்புக்களை ஊக்குவிக்கத் பல திட்டங்கள் அமுல் செய்யப்படவிருக்கின்றன.

✪ வெளிநாட்டுச் சம்பாத்தியத்தில் 2 ஆயிரம் அமெரிக்க டொலர்களையும் அதற்கு அதிகமான தொகையையும் சேமிப்பில் வைத்திருப்பவர்களுக்கு வீடுகட்ட, சேமிப்புத் தொகையின் இருமடங்கு கடன் சிறு வட்டியுடன் வழங்கப்படும்.

✪ வெளிநாட்டில் பணிபுரிந்து 55 வயது பூர்த்தியாகித் திரும்புவர்களுக்கு விசேட ஓய்வூதியத் திட்டம்.

✪ வெளிநாட்டில் வேலைசெய்யும் இலங்கையர் அங்கு உயிரிழந்தால் நஷ்டஈடாக 3 லட்சத்து 50 ஆயிரம் வழங்கப்படும். தற்போது 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

✪ அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

✪ ஓய்வூதியர்கள் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க விசேட கொடுப்பனவு வழங்கப்படும்.

வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியே சபையில் சமர்ப்பிப்பார் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பாதுகாப்புக் காரணங்களால் அவர் நேற்று நாடாளுமன்றத்துக்கு வருகைதரவில்லை என்று கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
நடத்தும்
மூன்று நிலா நாள் கருத்தரங்கு
இடம் :-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, குமாரசுவாமி மண்டபம்
காலம் :-இன்று (09-03-2001) வெள்ளிக்கிழமை
நேரம் :-பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)
தலைமை:-திரு.க.சி.குகதாசன்
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
தலைப்பு :-"புவிநடுக்க அனர்த்தங்கள்"
கருத்துரை வழங்குபவர்:-
கலாநிதி S.T.B.ராஜேஸ்வரன் (M.A, Phd)
(முதுநிலை விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)
அனைவரும் வருக!
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம்
ஆதரவு:- நீபன் ஹாட்வெயர்ஸ்
(C/15623) பிரதான வீதி, பண்டத்தரிப்பு

அம்பாள் துணை
தங்க நகை வியாபார ஸ்தாபனத் திறப்பு விழா
அறிமுக அழைப்பு
அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் மாசி மாதம் 25 ஆம் நாள் இன்று (09-03-2001) வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிமுதல் 9.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற
விஷ்ணு ஜீவல்லறி
என்னும் புதிய நகை வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதற்கு இறைவன் துணை கொண்டு நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
வின்சர் தியேட்டர் முன்பாக, 181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (85038)
தங்கள் நல்வரவை நாடும் உரிமையாளர்கள்:- விஷ்ணு ஜீவல்லறி ஸ்தாபனத்தார்.

ஐடியல் அக்கடமி
உ.அ.அ.பணிமனை வீதி, சண்டிலிப்பாய்
A/L 2002 மாணவர்களுக்கு
குறிப்பீட்டு அளவையியல்
ஆரம்பம் :- நாளை 10-03-2001
நேரம் :- 8.30 (ப.நே.)
✡ புதிய மாணவர்களும் அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
NOTE:- 500 க்கு மேற்பட்ட பயிற்சிகள் மேலதிக வகுப்புகளில் செய்யப்படும்.
ஆசிரியர்:- E.S.பாலன்
(C15561)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.